Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, OCTOBER 16 2024

புதன்கிழமை ஒக்டோபர் 16, 2024 | ஒளி: 10 கதிர் 072 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையினால் திங்கட்கிழமை (14) மற்றும் செவ்வாக்கிழமை (15) வரை மூடப்பட்டிருந்த மேல் மற்றும் தென் மாகாணங்களில் உள்ள பாடசாலைகளை புதன்கிழமை (16) மீண்டும் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையினால் பல்வேறு பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இந்நிலையில், மூடப்பட்டுள்ள ஏனைய பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் மாகாண கல்விப் பணிப்பாளர் தீர்மானிக்க வேண்டும்.

## காலக்கெடு விதித்த கம்மன்பிலவுக்கு காலக்கெடு



உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பான அறிக்கைகள் இரண்டையும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில எதிர்வரும் மூன்று நாட்களில் அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும் என அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை (15) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து இன்னமும் வெளியிடப்படாத இரண்டு அறிக்கைகளையும் ஒரு வாரகாலத்திற்குள் அரசாங்கம் வெளியிடவேண்டும் எனவும் இல்லாவிட்டால் அவற்றை இணையவழியில் தான் வெளியிடப்போவதாகவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில அறிவித்திருந்தமைக்கு பதிலளிக்கும் போதே அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## "பாதுகாக்கும் பொறுப்பு அதிகாரிகளுக்கும் உள்ளது"



பிரஜைகள் திருப்திப்படும் அரச சேவைக்காக பணியாற்ற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, எதிர்வரும் மூன்று வருடங்களில் எரிசக்தித் துறை இலக்குகளை அடைவதற்கான திட்டங்களை முறையாகவும் துரிதமாகவும் முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வலுசக்தி அமைச்சில் செவ்வாய்க்கிழமை (15) முற்பகல் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## மூட்டைக்கொச்சிக்காயை அரைத்து ஆணுறுப்பில் ஊற்றிய வழக்கு

ஆணுறுப்பில் மூட்டைக்கொச்சிக்காய் (நைமிளகாய்) அரைத்து கறைத்து ஊற்றிய சம்பவம் தொடர்பில் இளைஞர் ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் தொடர்பில் சட்டமா அதிபர் ஆஜராகுவதற்கு மறுத்துள்ளார்.

தெல்தெனிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சார்பில் சட்டமா அதிபர் ஆஜராக மாட்டார் என சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு திங்கட்கிழமை (14) அறிவித்துள்ளார்.

தெல்தெனிய பொலிஸாரால் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, தடுத்துவைத்திருந்த போதே, மூட்டைக்கொச்சிக்காய் (நைமிளகாய்) கறைத்து அவருடைய ஆணுறுப்பில் ஊற்றியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## "ஷானியின் நியமனத்தில் உள்நோக்கம்"

குற்றப் பிரிவின் பணிப்பாளராக ஷானி அபேசேகர நியமிக்கப்பட்டமை அரசியல் உள்நோக்கம் கொண்ட செயல் என ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.



ஜனாதிபதித் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தியின் மேடையில் தோன்றிய ஷானியின் நியமனம் அரசியல் உள்நோக்கம் கொண்டது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு காரணமானவர்களை அவர் விரைவில் வெளிக்கொண்டுவருவார் என எதிர்பார்க்கிறோம் என்றார்







## பரீட்சையை இரத்து செய்யக்கோரி மனு

செப்டம்பர் 15 ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் தாள் I மற்றும் இரண்டாம் தாள்களை இரத்து செய்யுமாறு உத்தரவிடுமாறு கோரி 27 மாணவர்கள், அவர்களது பெற்றோருடன் இணைந்து உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை செவ்வாய்க்கிழமை (15) தாக்கல் செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## 3 பிரிவினருக்கு நிவாரணம்

ஓய்வூதியர்கள், விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில், திங்கட்கிழமை(14) கூடிய அமைச்சரவையில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான அமைச்சரவை பத்திரத்தை நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுப்பு, திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்திருந்தார்.

அனைத்து ஓய்வூதியர்களுக்கும் 3,000 ரூபாய் மாதாந்த இடைக்கால கொடுப்பனவு வழங்குவதற்கும், 2024/2025 பெரும் போகத்தில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஒரு ஹெட்டேயருக்கு தலா 25,000 ரூபாய் என்ற வகையில் ஆகக்கூடியது 2 ஹெக்டேயருக்கு உர மானியத்தை அதிகரித்து வழங்குவதற்கும். மீன்பிடிக் கலங்களின் உரிமையாளர்களுக்கு நிதி நிவாரணம் வழங்குவதற்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவைத் தீர்மானத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான நிதியை தேசிய வரவு-செலவுத் திட்ட திணைக்களத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து பொருத்தமான வகையில் முகாமைத்துவம் செய்வதற்கு அங்கிகாரம் கிடைத்துள்ளது.



## வியாழனன்று ரணில் விசேட உரை

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் வியாழக்கிழமை (17) விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.



2024 ஜனாதிபதி தேர்தலின் பின்னர் ரணில் விக்கிரமசிங்க பகிரங்க உரையொன்றை நிகழ்த்தவுள்ள முதற் சந்தர்ப்பம் இதுவாகும்.

தொடர்ச்சி P2

## மீன்கள் விலைகள் அதிகரிப்பு

சந்தையில் மீன்களின் விலை மீண்டும் வேகமாக அதிகரித்துள்ளதாக நுகர்வோர்கள் தெரிவிக்கின்றனர்.

அதன்படி, சில்லரை சந்தையில் ஒரு கிலோ கிராம், கெலவல்லா 1900 ரூபாய்க்கும், பாரா 1,800 ரூபாய்க்கும், தலபத் 2,200 ரூபாய்க்கும், சாலயா 420 ரூபாய்க்கும், லின்னா 800 ரூபாய்க்கும், பலயா 980 ரூபாய்க்கும், அலகோதுவா 850 ரூபாய்க்கும், இஸ்ஸா 1,800 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த சில தினங்களை விட பேலியகொட மத்திய சந்தையில் மீன்களின் மொத்த விலையும் சற்று அதிகரித்துள்ளது.

அவர்கள் கூறுகையில், கெலவலா 1,200 ரூபாய்க்கும், தலபத் 1,600 ரூபாய்க்கும், பலா 800 ரூபாய்க்கும், பாரா 1,100 ரூபாய்க்கும், மத்தி 700 ரூபாய்க்கும், சாளைய 350 ரூபாய்க்கும், லின்னா கிலோ கிராம் 600 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.

கனமழையுடன் மோசமான வானிலையும் மீன் விலையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

## றொஹானின் உதவியாளர் கைது

துபாயில் தலைமறைவாகியுள்ள பிரபல போதைப்பொருள் கடத்தல் காரரான " றொஹான் "என்பவரின் உதவியாளரான கொழும்பு- 12யைச் சேர்ந்த 47 வயதுடைய நபர் ஒருவர் திங்கட்கிழமை (14) கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் கொழும்பு கிராண்ட்பாஸ், ஸ்டேஸ்புர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சந்தேக நபரின் வீட்டிலிருந்து 250 கிராம் 590 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## "கடந்தகால குற்ற விசாரணைகளை அரசாங்கம் ஒருபோதும் தவிர்க்காது"



ஏற்கனவே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள ஏழு சம்பவங்களிற்கு அப்பால் கடந்த காலத்தின் அனைத்து குற்றங்கள் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்துள்ள அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் விஜித ஹேரத், குற்றவாளிகள் என கண்டுபிடிக்கப்படுபவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

கடந்தகால குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதை அரசாங்கம் ஒருபோதும் தவிர்க்காது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## “பாதுகாக்கும் பொறுப்பு அதிகாரிகளுக்கும் உள்ளது”



**“நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சிக்கு மோசடி, ஊழல் மற்றும் வீண்விரயம் என்பனவே காரணமாக அமைந்ததென மக்கள் நம்புவதாகவும், அரச பொறிமுறை முழுவதும் பரவியுள்ள மோசடி மற்றும் ஊழலைத் தடுப்பதற்காக மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைப் தான் பாதுகாப்பேன்**

ஏனைய நாடுகளில் வலுசக்தித் துறைக்கு உயர்ந்த நிலை வழங்கப்பட்டுள்ளதைப் போன்று இலங்கையிலும் வலுசக்தித் துறைக்கு முன்னணி இடம் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, வலுசக்தி அமைச்சு என்பது நிதி வருமானங்களைப் பெறும் அமைச்சு எனவும், அதிக வருமானம் கிடைக்கும் போது முறைகேடுகள் இடம்பெறலாம் என்ற கருத்து சமூகத்தில் நிலவுவதாகவும் குறிப்பிட்டார்.

இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தமது விருப்பத்தை எதிர்பார்ப்புடன் பயன்படுத்தி யுள்ளதாகவும், அந்த ஆணைக்கு தான் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

பழைய அரசியல் கலாசாரத்தின் மீதான எதிர்ப்பு, பிரஜைகள் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் அரச சேவையின் செயற்பாடுகள் தொடர்பான பிரஜையின் அதிருப்தி காரணமாக புதிய அரசியல் சம்பிரதாயத்தினை மக்கள் எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சிக்கு மோசடி, ஊழல் மற்றும் வீண்விரயம் என்பனவே காரணமாக அமைந்ததென மக்கள் நம்புவதாகவும், அதனை தடுப்பதற்காகவே இம்முறை மக்கள்ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, அரச பொறிமுறை முழுவதும் பரவியுள்ள மோசடி மற்றும் ஊழலைத் தடுப்பதற்காக மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைப் தான் பாதுகாப்பதாகவும் தெரிவித்தார்.

அரச ஊழியர்களும் தங்களின் பொறுப்புகளை முறையாக நிறைவேற்ற தங்களை அர்ப்பணிக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

பொதுச் சொத்துக்கள், சமூகத்தின் சொத்தாக பாதுகாக்கப்பட வேண்டும் எனவும், அந்தச் சொத்துக்களை மோசடி அல்லது ஊழலுக்கு உட்படுத்த எவருக்கும் உரிமை இல்லை எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

பிரஜைகளை திருப்திப்படுத்தும் வகையில் வினைத்திறன்மிக்க மற்றும் செயற்திறன்மிக்க அரச சேவையை உருவாக்குவதற்கு தற்போதைய அரச உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு அவசியமானது எனவும், அதற்காக எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இந்த முறை மக்கள் ஆணையின் கட்டமைப்பு, நோக்கம் மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு அரச உத்தியோகத்தர் கடமை உணர்வுடனும் பொறுப்புடனும் செயற்பட வேண்டுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்குரிய அரசியல் தலைமைத்துவத்தை வழங்க தமது தரப்பு தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அரச உத்தியோகத்தர் தனது கடமை எல்லைக்குள் மேற்கொள்ளும் மக்கள்நல அனைத்து செயற்பாடுகளுக்கும் தாம் முன் நிற்பதாகவும், செய்யக்கூடாத ஒன்றைச் செய்தால் அது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்கத் தயங்கப் போவதில்லை எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

வலுசக்தித் துறையில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் மற்றும் அடுத்த சில ஆண்டுகளில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் பற்றியும் இதன்போது விரிவான மற்றும் நீண்ட மீளாய்வு நடத்தப்பட்டது.

அடுத்த மூன்று ஆண்டுகளில் வலுசக்தித் துறையின் இலக்குகளை எவ்வாறு அடைவது என்பது குறித்தும், மக்களுக்கு வழங்கக்கூடிய குறுகிய மற்றும் நீண்ட கால நிவாரணங்கள் குறித்தும் இங்கு மேலும் கலந்துரையாடப்பட்டது.

## காலக்கெடு விதித்த
# கம்மன்பிலவுக்கு காலக்கெடு

இந்த அறிக்கைகள் எவையும் காணாமல்போகவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உதய கம்மன்பிலவிடம் இருக்கும் அறிக்கையை அரசாங்கத்திடம் கையளிக்கவேண்டும். அத்துடன், அது எவ்வாறு கிடைத்தது என்பது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கப்படும். அத்துடன், இவ்வளவு நாட்களாக அதனை ஏன், வெளியிடாமல் வைத்திருந்தார் என்பது குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்துள்ள விஜித ஹேரத், தமது அரசாங்கத்தின் கீழ் எந்தவொரு விசாரணைகளும் மூடி மறைக்கப்படாது என்றார்.

# “கடந்தகால குற்ற விசாரணைகளை அரசாங்கம் ஒருபோதும் தவிர்க்காது”




அவசியமான தகவல்கள்பெறப்பட்ட அல்லது விசாரணைகள் பூர்த்தியான அல்லது சிறியளவு விசாரணைகளை முன்னெடுக்கவேண்டியுள்ள ஏழு முக்கிய சம்பவங்கள் குறித்தே அரசாங்கம் தற்போது விசாரணைகளை துரிதப்படுத்தியுள்ளது.

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை ரக்பி வீரர் வாசிம் தாஜூதீன் மரணம் பிரகீத் எக்னலிகொட காணாமல்போகச்செய்யப்பட்டமை குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்

ஆனால் இதன் அர்த்தம் ஏழு சம்பவங்கள் குறித்து மாத்திரம் விசாரணைகளை முன்னெடுக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதல்ல ,கடந்தகாலத்தில்முறைப்பாடு செய்யப்பட்ட அனைத்து சம்பவங்கள் குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும். பொருளாதார குற்றங்கள்,படுகொலைகள் பத்திரிகையாளர்கள் காணாமல்போனமை குறித்தும் விசாரணைகளை மேற்கொள்ளுவோம். ரக்பி வீரர் வாசிம்தாஜூதீனின் மரணம்,லசந்த விக்கிரமதுங்க படுகொலை, பிரதீப் எக்னலிகொட காணாமலாக்கப்பட்டமை குறித்தும் விசாரணைகளை முன்னெடுப்போம்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல்போகச்செய்யப்பட்டமை குறித்த விசாரணைகள் பூர்த்தியாகிவிட்டன, நீதிமன்ற வழக்கொன்று இடம்பெறுகின்றது,தற்போதைக்கு புதிய விசாரணையை ஆரம்பிக்கவேண்டிய அவசியமில்லை தேவைப்பட்டால் புதிய விசாரணைகளை முன்னெடுப்போம்.

# சொந்த வீட்டில் கைவரிசை காட்டிய மகன் சிக்கினார்

சுமார் பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியான தனது தாயின் ஐந்து பவுன் தங்க சங்கிலியை திருடிய மகனை ஹட்டன் பொலிஸார் திங்கட்கிழமை(14) பிற்பகல் கைது செய்துள்ளனர்.

ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செனன் தோட்டத்தை சேர்ந்த பெண் ஒருவர் தனது வீட்டின் அலுமாரியில் இருந்த ஐந்து பவுன் தங்க நகை திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளார்.

அதனடிப்படையில் மேற்கொண்ட விசாரணையின் போது முறைப்பாடு பதிவு செய்த பெண்ணின் மகன், தங்க நகையை ஹட்டன் நகரில் உள்ள தனியார் அடகுக் கடையொன்றில் ஒன்பது இலட்சம் ரூபாவுக்கு அடகு வைத்துள்ளமை தெரியவந்துள்ளது.


இவ்வாறு பெற்றுக்கொண்டு ஒன்பது லட்சத்தில் ஒரு இலட்சம் ரூபாவை அவரது நண்பருக்கு வழங்கியுள்ளதாகவும் மீதி பணத்தை சந்தேகநபர் முழுமையாக செலவழித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் தற்போது தாய் வீட்டுக்குப் பக்கத்தில்



வசித்து வருவதுடன் அவரின் மனைவி வெளிநாட்டில் தொழில் செய்து வருவதாகவும் சந்தேக நபர் மதுவுக்கு அடிமையானவர் எனவும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை செவ்வாய்க்கிழமை (15) அன்று ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



# மூட்டைக்கொச்சிக்காயை அரைத்து ஆணுறுப்பில் ஊற்றிய வழக்கு

இது மிகவும் பாரதூரமான சம்பவம் என்பதால், பிரதிவாதியான பொலிஸ் உத்தியோகத்தர்கள் சார்பில் ஆஜராகாமல் இருப்பதற்கு சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளார் என சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்த மனு உயர் நீதிமன்ற நீதியரசர்களான யசந்த கோதாகொட மற்றும் குமுதுனி விக்ரமசிங்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

ருவன் சாந்த பிரியதர்ஷனவினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவில், பொலிஸ் மா அதிபர், தெல்தெனிய தலைமையக பொலிஸ் பரிசோதகர், சட்டமா அதிபர் உள்ளிட்ட 11 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி தெல்தெனிய பொலிஸாரால் தாம் கைது செய்யப்பட்டு சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதாகக் கூறியுள்ள மனுதாரர், இது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# வியாழனன்று ரணில் விசேட உரை



2 நாட்டின் சமகால அரசியல் போக்கு மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து அவர் வெளிப்படுத்தவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலில் போட்டியிடும் புதிய ஜனநாயக முன்னணிக்கு ரணில் விக்கிரமசிங்க தலைமை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.எனினும், பாராளுமன்ற அரசியலுக்கு அவர் விடைகொடுத்துள்ளார்.

# பரீட்சையை இரத்து செய்யக்கோரி மனு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்துமாறும் மனுதாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சட்டத்தரணி மஞ்சுள பாலசூரியவின் ஊடாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர, பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட பலர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மீள நடத்தாமல் இருப்பதற்கு பரீட்சைகள் திணைக்களம் திங்கட்கிழமை (14) காலை நடைபெற்ற கூட்டத்தின் போது தீர்மானித்துள்ளது.

அத்துடன், கசிந்ததாகக் கூறப்படும் மூன்று வினாக்களுக்கும் இலவச புள்ளிகளை வழங்குவதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ஏழு பேர் கொண்ட குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து திங்கட்கிழமை (14) இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பரீட்சையை மீண்டும் நடத்த வேண்டாம் என அக்குழு முடிவு செய்துள்ளது.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் ஆலோசனைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பு நலனில் உறுதி

புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பையும் நலனையும் உறுதிப்படுத்துவதே தமது முதன்மையான நோக்கம் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புதிய தலைவர் கோசல விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புதிய தலைவராக கோசல விக்கிரமசிங்க கடமைகளைப் பொறுப்பேற்ற பின் பணியகத்தின் உத்தியோகத்தர்களை சந்தித்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்ப

ழைய பாரம்பரிய அதிகாரத்துவ முறை மாற வேண்டும். கடின உழைப்பின் மூலம் இந்த நிலையை அடைந்த ஜனாதிபதியின் நம்பிக்கை இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்பதேயாகும். ஒரு அமைப்புக்கு தலைவர் மற்றும் தலைவரின் கருத்துக்கள் இன்றியமையாதது. ஆனால் தலைவர் என்ற அதிகாரத்துடன் , எனக்கு கீழ் பணியாற்றும் அதிகாரிகளுடன் இடைவெளியை கடைப்பிடிப்பது எனக்குப் பிடிக்கவில்லை.

தொழிலாளர்களின் நலன் மற்றும் பணிப் பாதுகாப்பே எனது முதன்மை நோக்கம். பலர் வெளிநாடுகளில் ஆதரவற்றவர்களாக உள்ளனர். குறிப்பாக பணிப்பெண்கள் தங்கள் துக்கங்களைப் பகிர்ந்து கொள்ள சிரமப்படுகின்றனர். இதற்கிடையில். இலங்கையில் அவர்களது குழந்தைகள் ஆதரவற்ற நிலையில் உள்ளனர்.

பொருளாதார ரீதியில் மட்டுமன்றி சமூக ரீதியாகவும் இலங்கை பல பெரிய பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. வீட்டுப் பணிப்பெண்களாக இலங்கையர்களை வெளிநாடுகளுக்கு வேலைக்கனுப்பாமல் முறையான பயிற்சியுடன் திறமையான வேலையாட்களாக வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்ப வேண்டும்.

இது ஏற்கனவே இலாபகரமான நிறுவனம். இந்த நிறுவனத்தை மேம்படுத்த நாம் உறுதியாக இருக்க வேண்டும். எதிர்காலத்தில் அரசாங்கம் எங்களுக்கு இலக்குகளை வழங்கும். அந்த இலக்குகளை அடைய உழைப்போம். மேலும் நிறுவனத்தின் அதிகாரிகளுக்கு நல்ல வேலை வாய்ப்பை உருவாக்கும் அதே வேளையில் சமுதாயத்திற்கு ஏதாவது நல்லது செய்ய பாடுபட வேண்டும். அதற்கு அனைவரின் ஆதரவையும் எதிர்பார்க்கிறேன் என்றார்.



சிறுவர் தினத்தை கொண்டாடியது

## பேராதனை பல்கலை பழைய மாணவர் கொழும்பு பிரிவு



பேராதனை பல்கலை பழைய மாணவர் கொழும்பு பிரிவு வடமேல் மாகாணத்தில் குளியாப்பிட்டிய படுவஸ்நுவர பிரிவில் உள்ள கனத்தேவெவ கடுமுலுவ கனிஷ்ட பாடசாலையில் சிறுவர் தினத்தை அண்மையில் கொண்டாடியது. பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர் சங்கத்தின் முகாமைத்துவ சபை, இதனை தெரிவு செய்தது.

அதன் கொழும்பு பிரிவு 450 புத்தகங்கள், எழுதுபொருட்கள் மற்றும் பாடசாலைக்கான பொருட்களை பாடசாலை நூலகம் மற்றும் மாணவர்களுக்காக நன்கொடையாக வழங்கியது.

எதிர்வரும் அகில இலங்கை பாடசாலை ஏரோபிக் ஜிம்னாஸ்டிக் போட்டியில் வடமேல் மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்த தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிக்கு இரண்டு ஜிம்னாஸ்டிக் மெத்தைகள் நன்கொடையாக வழங்கப்பட்டது.

01 அக்டோபர் 2024 அன்று பாடசாலையில் நடந்த உலக குழந்தைகள் தினக் கொண்டாட்டத்தில், சங்கத்தின் உறுப்பினர்கள் பிரதிநிதிகள், அதிபர், ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோரால் நன்கொடைகள் வழங்கப்பட்டன. பாடசாலையில் மரக்கன்றும் நடப்பட்டது.

2024 பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு

# மூன்று வல்லுநர்கள் அறிவிப்பு

உலகில் பல்வேறு துறைகளில் தலை சிறந்து விளங்கும் நபர்களைத் தேர்வுசெய்து அவர்களுக்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டு வருகிறது. ஸ்வீடனை சேர்ந்த விஞ்ஞானி ஆல்பிரெட் நோபல் நினைவாக, ஆண்டுதோறும் மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் என 6 துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது. அந்த வகையில் நடப்பு ஆண்டுக்கான நோபல் விருதுகள் அறிவிக்கப்பட்டன. இதில், பொருளாதாரத் துறையைத் தவிர, இதர துறைகளுக்குக் கடந்த வாரம் விருதுகள் அறிவிக்கப்பட்டன.




இந்த நிலையில் பொருளாதாரத் துறைக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சைமன் ஜான்சன், டாரன் அசோமோக்லு, ஜேம்ஸ் ராபின்சன் ஆகிய மூன்று வல்லுநர்களுக்கு இந்த வருடம் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

நாடுகளின் செழுமைகளுக்கு இடையிலான வேறுபாடு குறித்த ஆய்வுக்காக இவர்களுக்கு இந்த விருது அளிக்கப்பட்டுள்ளது.



## மீண்டும் தலைதூக்கும் டெங்கு

தற்போதைய மழையுடன் கூடிய காலநிலை காரணமாக டெங்கு காய்ச்சல் மீண்டும் தலைதூக்கும் அபாயம் உள்ளதாக சுகாதார திணைக்களம் எச்சரித்துள்ளது.

இந்த வருடத்தில் இதுவரை 40,657 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், 20 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் சமூக சுகாதார நிபுணர் டொக்டர் அனோஜா தீரசிங்க தெரிவித்தார்.

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் மீண்டும் டெங்கு நுளம்புகள் பரவும் அபாயம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

"ஒக்டோபர் மாதத்தில் மாத்திரம் மொத்தம் 1,247 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். பெரும்பாலான நோயாளர்கள் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் பதிவாகியுள்ளனர். கண்டி, இரத்தினபுரி, மாத்தறை, காலி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களிலும் அதிக தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். இந்த மழை நிலைமையால் எதிர்காலத்தில் டெங்கு பாதிப்பு அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம்" என்றார்.

முல்லைத்தீவுக்கு

## எரிக் வோல்ஸ் விஜயம்



■ சண்முகம் தவசீலன்

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனடா உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் (Eric Walsh) முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு செவ்வாய்க்கிழமை (15) விஜயம் செய்ததுடன் அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரனை சந்தித்து மாவட்ட வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

இக்கலந்துரையாடலின் போது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்கள் தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்கள் பிரச்சினைகள் தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு அபிவிருத்தித் தேவைகள் தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரினால் கனடா உயர்ஸ்தானிகருக்கு விபரிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் மற்றும் மாவட்ட தொழித்துறை அமைப்புப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இலங்கை பெண்கள் வலைப்பந்து

## அணி பிரதமரை சந்தித்தது



இந்தியாவில் நடைபெறவுள்ள ஆசிய வலைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்கும் இலங்கை பெண்கள் வலைப்பந்து தேசிய அணியினர், விளையாட்டுத்துறை அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரியவை திங்கட்கிழமை (14) சந்தித்துள்ளனர். பிரதமர் ஹரிணி அமரசூரிய அணியினருடன் சிநேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன் போட்டியில் வெற்றிபெற வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இம்முறை ஆசிய வலைப்பந்து சாம்பியன்ஷிப்பில் முதன்முறையாக 14 ஆசிய நாடுகள் பங்கேற்கின்றன. இந்த ஆண்டுக்கான போட்டியின் தொடக்க விழா ஒக்டோபர் 17ஆம் திகதி மாலை 03 மணிக்கு நடைபெறவுள்ளதுடன், போட்டிகள் ஒக்டோபர் 18ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை இந்தியாவின் பெங்களூரில் நடைபெறவுள்ளது.

நடப்புச் சாம்பியனான இலங்கை 2018 மற்றும் 2022 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் வெற்றி பெற்று, இம்முறை மூன்றாவது முறையாகவும் ஆசிய கிண்ணத்தை கைப்பற்றுவதை இலக்காகக் கொண்டுள்ளது.

## ரயிலுடன் லொறி மோதியதில் ஒருவர் காயம்



தேயிலை கொழுந்து ஏற்றிச் சென்ற லொறியொன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் லொறியின் உதவியாளர் காயமடைந்து கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் திங்கட்கிழமை (14) அனுமதிக்கப்பட்டுள்ளார். ஹட்டன் யூனிபீல்ட் தோட்டத்தில் இருந்து தேயிலை தொழிற்சாலைக்கு தேயிலை கொழுந்துகளை ஏற்றிச் சென்ற லொறி ஹட்டனிலிருந்து இருந்து எல்ல நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதியுள்ளது. விபத்து இடம்பெற்ற இடத்தில், ரயில் பாதுகாப்பு கடவை காணப்பட்டாலும் அதற்கு காவலாளி இல்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது, ரயில் முன்னோக்கி வருவதை கண்ட சாரதி லொறியை பின்னால் செலுத்த முற்பட்ட போது லொறி ரயிலுடன் மோதியுள்ளதுடன் இதன்போது, லொறியின் உதவியாளர் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் லொறியின் பின்புறத்தில் தோட்டத் தொழிலாளர்கள் ஐவர் பயணித்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர். விபத்து காரணமாக லொறியின் முன்பகுதி பலத்த சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, புகையிரத பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் காயமடைந்த லொறியின் உதவியாளரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதுடன் ரயிலை முன்னோக்கி செலுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## நட்பாகவே இருந்து திருடிய இளைஞன் கைது

மொனராகலை கஹட்டருப்பை, டின்கிரிகொல்ல கிராமத்தில் உள்ள வீடொன்றுக்கு மேலுமிரு இளைஞர்களுடன் இறப்பர் பால் வெட்ட சென்ற இளைஞன், வீட்டின் உரிமையாளரின் கைப்பையில் இருந்த 6 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க நகையை திருடிச் சென்றுள்ளதாக கஹட்டருப்பை பொலிஸார் தெரிவித்தனர்.

உரிமையாளர் பதிவு செய்த முறைப்பாட்டின் பிரகாரம் மேற்கொண்ட விசாரணையின் போது படல்கும்புர பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய சந்தேகநபர் செவ்வாய்க்கிழமை (15) கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் சந்தேக நபர் பதுளை நகரில் உள்ள நிதி நிறுவனமொன்றில் குறித்த நகையை அடகு வைத்து ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் சந்தேக நபரிடமிருந்து குறித்த நகைக்கான அடகு சீட்டு கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தங்க நகையை பெற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்வதுடன் சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


குறித்த இளைஞர்களை குடும்ப உறுப்பினர்கள் போல் நடத்தும் வேளையில் நட்பாகவே இருந்து திருட்டில் ஈடுபட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## தவறி விழுந்த பட்டதாரி பெண் மரணம்

பாதி கட்டி முடிக்கப்பட்ட இரண்டு மாடி வீட்டின் மேல் மாடியின் பாதுகாப்பற்ற பகுதியில் இருந்து தவறி விழுந்து பட்டதாரி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றிய நிவித்திகல, கால்லகே மண்டிய பிரதேசத்தை சேர்ந்த 30வயதுடைய ஹன்சனி பாக்யா ஜயதிலக்க என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் பத்தரமுல்லை பிரதான வீதி, சம்பத் பிளேஸில் உள்ள இரண்டு மாடி வீட்டின் மேல் மாடியின் பின் பகுதியில், மேலும் மூன்று யுவதிகளுடன் தற்காலிகமாக தங்கி வந்துள்ளார். குறித்த பெண் கடந்த



வெள்ளிக்கிழமை (11) அன்று வேலைக்கு சென்று) மாலை 6.40 மணியளவில் வந்த நிலையில் அவரின் நண்பி அவளை அழைத்த போது தான் இரவு உணவிற்காக கொண்டு வந்த இறால் மீனை தயார் செய்வதாக கூறியுள்ளார்.

அதன் பின்னர் நண்பி குளியலறைக்கு சென்ற நிலையில், அலறலுடன் பலத்த சத்தம் கேட்டதும் வெளியே வந்து பார்த்த போது தனது தோழி மேல் மாடியில் இருந்து கீழே விழுந்து கிடப்பதைக் கண்டு, உடனடியாக உரிமையாளரிடம் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து அயலவர்கள் பெண்ணை சுவசரிய ஆம்புலன்ஸ் மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதுடன் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## புல் வெட்ட சென்றவர் மரணம்

நல்லத்தண்ணி, மெரேயா தோட்டத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் திங்கட்கிழமை (14) அன்று புல் வெட்ட சென்ற போது கீழே வழுக்கி விழுந்து காயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார்.

மெரேயா தோட்டத்தின் வலதல பிரிவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான எம். முருகன் என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மஸ்கெலியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

## உலக முடிவில் சடலம்: வீசிய இருவர் கைது

ஹாலி எல ரொசெட் தோட்டத்தை சேர்ந்த ஓட்டோ சாரதியை மடுல்சீம, உலக முடிவு பிரதேசத்திற்கு அழைத்துச் சென்று, அவரை கொன்று சடலத்தை உலக முடிவில் இருந்து பள்ளத்திற்கு வீசிய சம்பவம் தொடர்பில் , மடுல்சீம, படாவத்தையை சேர்ந்த சந்திரபோஸ் தயாளன் (34வயது) திங்கட்கிழமை (14) கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹாலி எல ரொசெட் தோட்டத்தை சேர்ந்த விவேகானந்தன் சுஜீவன் (23வயது) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞன், சந்தேக நபரின் முச்சக்கரவண்டியை, 350,000 ரூபாய் பணம் செலுத்தி,ஒரு தவணைக்கு 13,000 ரூபாய் என்ற அடிப்படையில் 36 தவணைகளில் பணத்தை செலுத்த குத்தகை (லீசிங்) முறையில் பெற்றுக்கொண்டுள்ளதாகவும், சந்தேக நபர்,மடுல்சீம பட்டாவத்தை தோட்டத்தில் வசிக்கும் இன்னொரு நபருடன் சேர்ந்து மாணிக்ககற்கள் , தங்க பொருட்களை விற்பனை செய்ய போவதாக கூறி முச்சக்கரவண்டி சாரதியையும் அழைத்துள்ளார்.



மடுல்சீம நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் வைத்து சந்தேக நபரும் அவரது நண்பனும் முச்சக்கர வண்டியில் ஏறியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

பின்னர், சிறிய உலக முடிவுக்கு செல்லும் பாதைக்கு அருகிலுள்ள காட்டில் தங்கம் மற்றும் விலை உயர்ந்த மாணிக்கக் கற்களை மறைத்து வைத்திருப்பதாக கூறி முச்சக்கர வண்டி சாரதியை அழைத்துச் சென்று அவரை தாக்கி கொலை செய்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

வீசப்பட்ட இளைஞனின் சடலத்தை செவ்வாய்க்கிழமை (15) பிற்பகல் வரையிலும் கண்டுபிடிக்கவில்லை என தெரிவித்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பேரிடர்களை எதிர்கொள்ள முன்னாயத்தம் வேண்டும்

நாட்டில் பெய்து கொண்டிருக்கிறது பெரும் மழை, மக்களின் வாழ்க்கையில் எரிச்சலடைய செய்துள்ளது. இரண்டு பருவ மழைகள், இரண்டு இடைப்பட்ட பருவ மழைகள் மூலம் சீரான மழையைப் பெற்ற நம் நாடு, "பெரும்போகம்" மற்றும் "சிறுபோகம்" இரண்டையும் நன்றாக பயிரிட்ட நாடு. ஆனால், பெய்யாத மழையும், அடிக்கடி வீசும் புயல்களும் அந்த பயிர் முறைகளை தெளிவாக மாற்றியுள்ளன.

அதாவது, பருவநிலை மாற்றத்தின் எதிர்மறையான தாக்கம் நம் வீட்டு வாசலை எட்டியிருக்கிறது என்பதை இந்தப் பெருமழையும் வெள்ளமும் நமக்குச் சொல்கிறது. கடந்த 5 வருடங்களில் சராசரி மழைவீழ்ச்சியைப் பார்த்தால், மே-ஜூன் மாதங்களில் கொழும்பையும் தென் பிராந்தியத்தையும் பாதித்த பெருமழை மற்றும் வெள்ளம் உண்மையான இயற்கைப் பேரழிவு அல்ல.

தற்போது நாட்டின் தென் மாகாணத்தில் கனமழை பெய்து வருகிறது. ஆறுகள் நிரம்பி வழிகின்றன. வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானதே மழைக்கு காரணம் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுவரை 134,000 பேர் இடம்பெயர்ந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. மேலும் பல நாட்களாக இரவு பகலாக பெய்து வரும் மழையால் மக்களின் அன்றாட நடவடிக்கைகள் ஏறக்குறைய ஸ்தம்பித்துள்ளது. குறைந்த பட்சம் துணிகளை உலர்த்துவதற்கு கூட போதாது.

உண்மை என்னவெனில், நாடு இவ்வாறானதொரு பேரிடர் நிலையை எதிர் கொண்ட பின்னர், காய்கறிகள், தேங்காய் உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் அபாயம் உள்ள காலம் வரவுள்ளது. தேங்காய் ஒன்றின் விலை ஏற்கனவே 150 ரூபாயாக இருக்கும் இவ்வேளையில், மேலும் விலை அதிகரித்தால்.

மேலும், இந்த இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் சவால்கள், நாடாக மாறும் எந்தத் தலைவருக்கும் கொஞ்ச நஞ்சமல்ல. ஒவ்வொரு முறையும் நாம் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப போராடும் போது, எதையாவது இழக்க நேரிடும். உண்மையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கொவிட் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் என இரண்டு வகையான அனர்த்தங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இயற்கை அனர்த்தங்களை தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றார். இது உண்மையாக இருந்தால், இந்த இயற்கைப் பேரிடர்களின் போக்கு அதிகமாக இருப்பதால், இனிமேல், காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ள குறைந்தபட்சம் உள்நாட்டிலும் உலக அளவிலும் ஒரு நிதிக்கு செல்ல வேண்டியது அவசியம். மேலும், உலகம் சொல்வது போல், பேரழிவுகளுடன் வாழ்வது என்ற பாடத்தை மக்களுக்கு கற்பிக்க வேண்டும்.

இயற்கையின் மீதான மனிதனின் ஆக்கிரமிப்பு தான், பேரழிவுகளுக்கு வழிசமைக்கின்றது. இயற்றையின் ஓட்டத்துக்கு ஏற்றவகையில் விட்டுவிட்டால், எந்த ஒரு பிரச்சினைக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படாது. பலரும் கால்வாய்களை அடைத்து கட்டிடங்களை கட்டி விடுகின்றனர். இதனால் சாதாரண மழைக்கும், வெள்ளக்காடாகிவிடுகின்றது. ஆகையால், இயற்கையின் மீதான மனிதனின் ஆதிகத்தை குறைப்பதன் ஊடாகவே, இயற்கை பேரழிவுகளில் இருந்து தற்காத்துக்கொள்ள முடியும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# மாற்றத்துக்கான அனுரவின் பயணம்



எம்.எஸ்.எம்.ஐயூப்

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதை அடுத்து தென் பகுதியில் ஏனைய அரசியல் கட்சிகளுக்குள் பெரும் குழப்ப நிலை உருவாகியுள்ளதாக தெரிகிறது.

இந்த குழப்பம் எவ்வளவு பாரியதென்றால் கடந்த பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்த அரசியல்வாதிகள் உள்ளிட்ட முக்கிய அரசியல்வாதிகளில் எவர் எந்த கட்சியில் இருக்கிறார் என்று கூற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அந்த அளவுக்கு கட்சி தாவல்கள் இன்னமும் காணக்கூடியதாக இருக்கிறது.

தெரண தொலைக்காட்சியையும், த மோர்னிங், அருண மற்றும் தமிழன் ஆகிய பத்திரிகைகளையும் ஆரம்பித்த திலித் ஜயவீர ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு மவ்பிம ஜனதா பக்ஷய (தாயக மக்கள் கட்சி) என்ற கட்சியை கடந்த வருடம் ஆரம்பித்தார்.

பின்னர் அவர் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பிலவின் பிவிதுரு ஹெல உருமய மற்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட சில கட்சிகளுடன் இணைந்து சர்வஜன பலய (சர்வஜன சக்தி) என்ற கூட்டணியை நிறுவினார்.

ஆயினும் அக்கூட்டணி பதிவு செய்யப்பட்டு இருக்காததால் அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் நட்சத்திரம் சின்னத்திலேயே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். அத்தேர்தலை அடுத்து அவர் சர்வஜன பலய என்ற கூட்டணியின்; பெயரிலேயே அடுத்த மாதம் 14 ஆம் திகதி நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மற்றொரு வேட்பாளரான முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான ரணசிங்க அவரது கூட்டணியில் இணைந்துள்ளார். அவர் கூட்டணியின் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையே விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று முடிவு செய்ததால் திலித்தின் கூட்டணியிலிருந்து ஒதுங்கி கொண்டுள்ளார். வேறு கட்சிகளில் இருந்து மேலும் பல அரசியல்வாதிகளும் இன்னமும் திலித்தின் கட்சியில் இணைகின்றனர்.

1950களில் இருந்து நாட்டில் இரு பிரதான கட்சிகளாக கருதப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் அரசியல் களத்திலிருந்து மறைந்து விட்டதாகவே தெரிகிறது.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, சிறிமா பண்டாரநாயக்க, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் இயங்கிய ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இறுதியாக மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இயங்கியது. கடந்த வருடம் அது பிளவுபட்டு ஒரு பிரிவு ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்தது.

மைத்திரியின் தலைமையிலான மற்றைய பிரிவு முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவை ஜனாதிபதி தேர்தலில் களமிறக்க திட்டமிட்டது. பிளவை அடுத்து ஏற்பட்ட சட்டப் பிரச்சினை ஒன்றின் காரணமாக அது தடுக்கப்படவே விஜேதாச மற்றொரு கட்சியை இரவலாக பெற்று ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு படு தோல்வியடைந்தார். அத்தோடு மைத்திரியின் குழு காணாமல் போய்விட்டது.

ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து, ஐக்கிய மக்கள் சக்தி 2020 ஆம் ஆண்டு பிரிந்து சென்றதிலிருந்து ஐக்கிய தேசிய கட்சி பெயரளவிலேயே நாட்டில் செயல்பட்டு வந்துள்ளது. ரணில் விக்ரமசிங்கவே இறுதியாக அதன் தலைவராக இருந்தார். அவர் இம்முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட போதிலும் ஏதோ ஒரு காரணத்தினால் ஐக்கிய தேசிய கட்சி சின்னத்தில் போட்டியிடாது கேஸ் சிலிண்டர் சின்னத்தில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்டார்.

அவரோடு இணைந்து இருந்தவர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் அதே சின்னத்தில் ஆனால் புதிய ஜனநாயக முன்னணி என்ற கட்சிப் பெயரில் போட்டியிடுகின்றனர். 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களிலும் ஐக்கிய தேசிய கட்சி அதே கட்சியில் போட்டியிட்டது. ஆனால் அப்போது அதன் சின்னம் அன்னமாக இருந்தது. அவர்கள் ஐக்கிய தேசிய கட்சியின் பெயரில் ஏன் போட்டியிடவில்லை என்பது எவருக்கும் தெரியாத புதிராக இருக்கிறது. அக்குழுவினருக்கு தலைமை தாங்கும் ரணில் விக்ரமசிங்க பொதுத் தேர்தலில் போட்டியிடுவதுமில்லை.

இம்முறை காணப்படும் மற்றொரு முக்கிய விடயம் என்னவென்றால் மிகவும் பலமான அரசியல் குடும்பமான அம்பாந்தோட்டையைச் சேர்ந்த ராஜபக்ஷ குடும்பத்தில் எவரும் போட்டியிடாமையேயாகும். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு 2.5 வீத வாக்குகளை பெற்ற நாமல் ராஜபக்ஷ போட்டியிடாது தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்கு செல்ல முயல்கிறார்.

ராஜபக்ஷ குடும்பம் மட்டுமின்றி பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த வேறு பல முக்கியஸதர்களும் இம்முறை போட்டியிடுவதில்லை. அவர்கள் அரசியலில் இருந்து விலகுவதாக இறுதி நேரம் வரை அறிவிக்கவும் இல்லை.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் படி தாம் தெரிவு செய்யப்படுவோம் என்ற நம்பிக்கை இழந்தமையே பலர் போட்டியிலிருந்து ஒதுங்கிகொண்டதற்கான காரணம் என ஊகிக்கலாம்.

தோல்வியடைவதைப் பார்க்கிலும் மிகச் சில விருப்பு வாக்குகளை பெற்று வெட்கப்பட வேண்டி வரும் என்பது பலரது கவலையாகும்.

அதேவேளை அரசியல்வாதிகள் பொதுப் பணத்தில் சுகபோக வாழ்க்கையை நடத்துவதை நிறுத்துவதாகவும் ஊழலை தடுப்பதாகவும் தேசிய மக்கள் சக்தி உறுதியளித்துள்ளது. அக்கட்சி அவ்விடயங்களில் உறுதியாக இருப்பதாக தெரிவதால் தாம் அரசியலில் குதிப்பதில் அர்த்தம் இல்லை என்று பலர் தேர்தலில் இருந்து ஒதுங்கி கொண்டதாகவும் தெரிகிறது.

இந்த நிலையைப் பற்றிக் குறிப்பிடும் போது, படுதோல்வி அடைந்து அல்லது மரணித்து அரசியலில் இருந்து விலகுவதுயல்லாது இலங்கையில் அரசியல்வாதிகள் ஒருபோதும் ஓய்வு பெறுவதில்லை என்றும் முதல் முறையாக பல அரசியல்வாதிகள் இம்முறை ஓய்வு பெற்றிருக்கின்றனர் என்றும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கடந்த ஞாயிற்றுக்கிழமை தமது கட்சி வேட்பாளர்கள் மத்தியில் உரையாடலும் போது கூறினார்.

இது முற்றிலும் உண்மை அல்ல என்ற போதிலும் பொதுவான உண்மையாகும்.

இம்முறை சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி பொதுத் தேர்தலில் பெரும் சவாலை எதிர்நோக்கி வருகின்றது. அனுர குமார ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதை அடுத்த அவரது கட்சியான தேசிய மக்கள் சக்திக்கான அரசியல் அலை அதிகரித்துள்ளதாக தெரிகிறது.

அத்தோடு சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்திக்குள் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்காக சண்டைகள் உருவாகியிருக்கின்றன. கொள்கை இணக்கப்பாடு இல்லாது பல கட்சிகளை இணைத்து கூட்டணி அமைக்கும் போது இது சகஜமான நிலைமையாகும்.

ஏனெனில் பிரதான கட்சி ஒன்றுடன் இணையும் சிறு கட்சிகளின் தலைவர்களும் அமைப்பாளர்களும் பிரதேச ரீதியாக பிரதான கட்சியின் தொகுதி அமைப்பாளர்களாவதையே விரும்புவர்.

அதுவே வேட்பாளராவதற்கான தகைமையாகும். அரசியல்வாதிகளின் தனிப்பட்ட நலன்களே பெரும்பாலான கட்சிகளை வழிநடத்துகின்றன. இந்த நிலையில் கட்சிகள் இணையும் போது தொகுதி அமைப்பாளர் ஆவதற்காக அக்கட்சிகளின் பிரதேச தலைவர்களிடையே போட்டியும் சண்டையும் ஏற்படுகின்றன. ஐக்கிய மக்கள் சக்தியில் இன்று அதுவே நடந்துள்ளது.

தாம் வெறுமனே ஒரு ஆட்சி மாற்றத்தை அன்றி சமூக மாற்றத்தையே திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி அனுரகுமாரவின் தேசிய மக்கள் சக்தி கூறி வருகிறது.

அதற்காக பொருத்தமானவர்களையே பாராளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்றும் அவர்கள் கூறி வருகின்றனர்.

எனவே அவர்கள் இம்முறை வெளியில் இருந்து எவரையும் வேட்பாளர்களாக சேர்த்துக்கொள்ளவில்லை. அக்கூட்டணியின் பிரதான கட்சியான மக்கள் விடுதலை முன்னணி அதன் ஆரம்பத்திலிருந்தே தமது உறுப்பினர்களின் தரத்தையும் ஒழுக்கத்தையும் பற்றி மிகவும் கவனமாக இருந்து வந்துள்ளது.

2004 ஆம் ஆண்டு தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட அதன் உறுப்பினர் ஒருவர் தமது பாராளுமன்ற சிறப்புரிமையை பாவித்து தமது நண்பர் ஒருவரை ஜப்பானுக்கு அழைத்துச் சென்று அங்கேயே விட்டுவிட்டு வந்தார். இது கட்சித் தலைவர்களுக்கு தெரிய வந்தது. போட்டிக் கட்சிகளுக்கு இதைப் பற்றித் தெரியாது. ஆயினும் மக்கள் விடுதலை முன்னணி அந்த உறுப்பினரை கட்சியிலிருந்து நீக்கியது.

இம்முறை பொதுத் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தியுடன் இணைய பலர் முயன்றனர். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் அவ்வாறு இணைய முயன்றார். ஆயினும் ஜனாதிபதித் தேர்தலில் தம்முடன் செயற்பட்டு பரிச்சயமானவர்களைத் தவிர வேறு எவரையும் வேட்பாளர்களாக இணைத்துக் கொள்வதில்லை என்ற நிலைப்பாட்டில் தேசிய மக்கள் சக்தி இருந்தமையால் அவ்வாறானவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களுக்கான கூட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (13) உரையாற்றும் போதும் ஜனாதிபதி அனுரகுமார பாராளுமன்ற உறுப்பினர்களின் தரத்தையே வலியுறுத்தினார்.

சமூக மாற்றத்துக்காக தமக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக்க வேண்டுமாக இருந்தாலும் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் அறிவிலும் ஒழுக்கத்திலும் தரமானவர்களாக இல்லாவிட்டால் தாம் எதிர்பார்க்கும் சமூக மாற்றத்தை அடைய முடியாது என்று அவர் வலியுறுத்தி கூறினார்.

குற்றமிழைப்பவர்கள் தமது கட்சியிலும் இருக்கலாம் என்றும் ஆனால் அவ்வாறானவர்களை பற்றி அறிந்த உடனேயே அவர்களை வெளியேற்ற தாம் தயங்காததே தமது கட்சிக்கும் ஏனைய கட்சிகளுக்கும் இடையிலான பிரதான வேறுபாடொன்றாகும் என்று அவர் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஒரு கூட்டத்தில் கூறினார்.

எனினும் எந்த சமூக மாற்றத்துக்கும் தேசிய மக்கள் சக்தி பொதுத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

எங்களை நாங்கள் தான் அமைதிப்படுத்த வேண்டும். எவரையும் நாம் குழப்புதல் ஆகாது. எமது நடத்தைகளால், வார்த்தைகளால் பிறரின் மனம் துன்பப்பட இடமளித்தலாகாது. அதாவது, எங்களது சொல்லாலும் செயலாலும் எவரது மனமும் குழம்பிட வழிவகுத்தலாகாது.

இத்தகைய கொள்கை நிலையில் வாழ்வது சிரமமானது கிடையாது. தேவையற்ற விமர்சனங்கள், நெஞ்சத்தை நோகடித்தல், பராமுகத்துடன் எவரையும் நிராகரித்தல் போன்ற குணாதிசயங்கள் வெறுக்கத்தக்க செயலாகும். சும்மா இருப்பவர்களைத் தொந்தரவு கொடுத்து விளையாடக்கூடாது. கேலி என்ற பெயரிலான உரையாடல்கள், நையாண்டிகள், சேட்டைகள் விரும்பத்தக்கன அல்ல! அதாவது, எங்களது சொல்லாலும் செயலாலும் எவரது மனமும் குழம்பிட வழிவகுத்தலாகாது.

ஒருவர் தனது வாழ்க்கையில் தனக்கான கௌரவம், உரிமை, சுதந்திரம் போன்றவைகளில் அக்கறை கொண்டு இயங்குகின்றார். இந்த நிலையில் அக்கறையுடன் வாழ்பவர், மற்றயவர்களின் மனநிலை பற்றியும் உணரவேண்டும். மனிதன் வெறும் சடப்பொருள் அல்ல; சும்மா இருப்பவர்களைத் தொந்தரவு கொடுத்து விளையாடக்கூடாது. கேலி என்ற பெயரிலான உரையாடல்கள், நையாண்டிகள், சேட்டைகள் விரும்பத்தக்கன அல்ல!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

# பாதையை பாருங்கள்

நுவரெலியா போபத்தலாவ மெனிக்பாம் தேசிய கால்நடை பண்ணை அக்கரப்பத்தனை நகரத்திலிருந்து 9 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இக்கிராமத்திற்கு செல்லும் 9 கிலோமீட்டர் தூரம் கொண்ட பாதையில் ஐந்து கிலோமீட்டர் தூரம் மாத்திரம் அரசாங்கத்தால் புனரமைப்பு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

கிராமத்திற்கு முறையான போக்குவரத்து சேவையும். இடம் பெறுவதில்லை. ஒரே ஒரு அரச பேருந்து மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

பாதையை அபிவிருத்தி செய்யாத காரணத்தினால் பஸ் சேவையும் அடிக்கடி இடை நிறுத்தப்படுவதாக இங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.

இங்கு வாழும் மக்களுக்கு நோய்கள் மற்றும் விபத்துக்கள் ஏற்பட்டாலும் கூட வாகனங்களில் கொண்டு செல்ல முடியாத அளவுக்கு இப்பாதை காணப்படுகிறது.

குறித்த பாதையிலே உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி புனரமைப்பு செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

துவாரகஷான்





# மாயமாகும் மன்னார்தீவு



கனிஸ்ரா ஜெயகாந்தன்,
மூன்றாம்வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்

மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட அழகான இயற்கை இடமாக மன்னார் தீவு விளங்குகிறது. இந்த தீவானது வரலாற்றுக்காலம் தொட்டு இன்றுவரை இலங்கையின் பூவியியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடமாகவும் கருதப்படுகின்றது. வரலாறுகளில் மாதோட்டம், மகாதித்த அல்லது மாந்தை ஆகிய பெயர்களால் அழைக்கப்பட்ட இடமானது தற்போதைய மன்னாரையே குறித்து நிற்கின்றது.

மன்னார் மக்கள் கடலையும், விவசாயத்தையும் நம்பியே தமது ஜீவனோபாயத்தை முன்னெடுக்கின்றனர்.

குறிப்பாக இத்தீவின் வடக்கே அகன்ற கண்டமேடைகளை கொண்ட மீன்வளம் நிறையப்பெற்றுள்ள இடங்கள் காணப்படுகின்றன. கடல்சார்ந்த உணவுகளான மீன், இறால், கணவாய், நண்டு போன்றவற்றை ஏற்றுமதி செய்து நமது நாட்டுக்கு தேவையான அன்னிய செலாவணியை மன்னார்தீவு பெற்றுக்கொடுக்கின்றது.

மேலும், எமது நாட்டின் கடலுணவு தேவையை பெருமளவு நிறைவேற்றியும் வருகின்றது. கடற்கரை, மணல் திட்டுகள், சதுப்பு நிலங்கள், பற்றைக்காடுகள், கண்டல் தாவரங்கள், பெட்ரோலியம், கனிய மணல், என இயற்கை வளங்களைக்கொண்டு சிறப்புற்று விளங்குகின்றது.

மன்னார் மாவட்டமானது சுற்றுலாத்துறையில் மாத்திரம் அன்றி உயிர்ப்பல்வகைமை கொண்ட சூழல் தொகுதியாகவும் அமையப்பெறுகிறது. 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட பல்வேறு வகையான விலங்குகள், தாவரங்கள் மற்றும் உயிரினங்களின் வாழ்விடத் தொகுதியை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது.

மன்னார் தீவினை தேடி 168 வகையான பறவைகளும், ஐந்து வகையான கடல் ஆமைகளும், 450 வகையான மீன்களும், 79 வகையான கடல் பஞ்சுகளும், 260 வகையான மொலஸ்காக்களும், 100 வகையான முட்டோலிகளும் தமது இடப்பெயர்ப்பு காலத்தில் வருகின்றன.

இவ்வாறு உயிர் பல்வகைமை மிக்க சூழலில் மேற்கொள்ளப்படும் திட்டமிடப்பட்ட அபிவிருத்திகள் காரணமாக மக்களுக்கும், உயிர் பல்வகைக்கும் பல்வேறு சிதைவுகளும், அழிவுகளும் ஏற்படுகின்றன.

குறிப்பாக காற்றாலை மின்வலு உற்பத்தி திட்டம் மன்னார்தீவு வாழ் மக்களுக்கு அதிகளவில் பாதிப்பினை ஏற்படுத்தும் விடயமாகவே காணப்படுகின்றது.

காற்றாடிகளின் இரைச்சல் காரணமாக மீன்கள் இறப்பதுடன் கரைவலை மீன்களின் எண்ணிக்கையும் குறைவடைகின்றது, மற்றும் மீன்கள் இனப்பெருக்கம் செய்யும் 18 ஒடைகள் இதுவரைக்கும் அழிக்கப்பட்டுள்ளன.

காற்றாலைகள் கடற்கரைக்கு அண்மையாக அமைக்கப்படுவதால் மீன்களின் இனப்பெருக்கத்தை ஊக்குவிக்கின்ற கடல்தாவரங்களுக்கும் அழிக்கப்படுகின்றன. இதனால் மீன்களின் இனப்பெருக்கம் வெகுவாக பாதிக்கப்பட்டுவதுடன் மீன்கள் கரைக்கு வருவது பெருமளவு தடைப்பட்டு விட்டதாக மீனவர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

கரைவழி மற்றும் சிறுபடகு மூலமான மீன்படி முற்றாக அழிவடைந்ததுடன் அதை நம்பி வாழும் மீனவர்களின் வாழ்வாதாரமும் கேள்விக்குறியாகி உள்ளது.

“தம்பபண்ணி” காற்றாலை மின்உற்ப்பத்தி திட்டத்தின் ஊடாக இதுவரைக்கும் மொத்தமாக 52 ராட்சத காற்றாலை கோபுரங்கள் 12 கிலோமீட்டர் தூரங்களுக்கு இடையில் அமைக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ளன. இந்த காற்றாலை கோபுரங்களை அமைப்பதற்காக ஒன்றுக்கு 6.4 ஏக்கர் நிலப்பரப்பு பரப்பு என்றவாறு சுமார் 190 ஏக்கர் காணிகள் சுவிகரிக்கப்பட்டுள்ளன.

குறித்த காணிகளில் இருந்த மக்கள் தமது சொந்த இடத்தினை விட்டு பல்வேறு இடங்களுக்கு வெளியேற்றப்பட்டு விட்டார்கள். இதன் காரணமாக அவர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த இருப்பிடங்கள் தற்போது இழந்த நிலையில் வாழ்கின்றார்கள்.

மின்வலு கோபுரங்களை அமைப்பதற்கான அத்திவாரங்களுக்காக பெருமளவு மண் அகழ்ந்து எடுக்கப்படுவதனால் இவ்விடத்தில் கடல்நீர் உட்புகுந்து வெகுவிரைவில் நன்னீர் உப்பு நீராக மாறும் அபாயம் காணப்படுகின்றது. அது மாத்திரம் அன்றி அதிக மழை காலங்களில் வெள்ளப்பெருக்கு சாதாரணமாக ஏற்படும் துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது.

காற்றாலை கோபுரங்களின் அத்திவாரங்களுக்காக பல அடி ஆழத்திற்கு இடப்படும் கொங்கிரீட் கலவையானது நிலத்தின் கீழான நீரோட்டத்தினை தடை செய்வதோடு மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு டெங்கு நோய்பரவக்கூடிய அபாயங்களும் காணப்படுகின்றது.

காற்றாலைகளில் இருந்து எழுப்பப்படும் ஒலிகளினால் நிலத்தில் அதிர்வுகளும் - இரைச்சல்களாலும் ஏற்படும் மனிதர்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

காற்றாலையின் மின்விசிறிகளில் (flay wy) இறக்கைகள் அடிபட்டு பலவகை பறவைகள் இறக்கின்றன. காற்றாலையின் இரைச்சலும் - இயக்கமும் காரணமாக வெளிநாட்டில் இருந்து மன்னார் தீவு வழியாக நம் நாட்டைத் தேர்வு செய்து வருகின்ற பறவையினங்களின் வருகை கணிசமான அளவு குறைவடைந்ததுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது மிகக்குறைவான பறவைகளை மன்னாரினை நோக்கி வருகை தந்துள்ளமையை அவதானிக்க கூடியதாக உள்ளது என்பது சூழலியலாளர்களின் கருத்தாக அமைகிறது.

ஒவ்வொரு அரசாங்கங்களினதும் காலத்திலும் பல்வேறு வகையான அபிவிருத்தித்திட்டங்கள் மேற்க்கொள்ளப்படுகின்றன. ஆனால் அவை குறித்த பிரதேசவாசிகளுக்கு மக்களுக்கும் எவ்வளவு நன்மை பயக்கின்றது என்பதனை ஆராய்ந்து செயற்பட தவறுக்கின்றனர்.

இந்த காற்றாலை திட்டத்தினால் மன்னார் மக்களுக்கு எந்தளவு நன்மை ஏற்படுகின்றது என்பது மிகப்பெரிய கேள்வியாகவே தற்போதுவரை அமைகிறது. அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளும் தனியார் கம்பனிகள் தமது சுயலாபத்திற்காக மக்களிடம் காணப்படுகின்ற இயற்கையான வளங்களை சுரண்டும் நடவடிக்கைகளை மிகவும் கவலைக்குரிய விடயங்களாகவே காணப்படுகின்றன.

தற்போது ஆட்சிக்கு வந்திருக்கின்ற புதிய அரசாங்கம் தனது கொள்கை திட்டங்களில் எவ்வாறான அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டாலும் அவை மக்களுக்கு சரியான - சாதகமான அபிவிருத்தி திட்டங்களாக அமைய வேண்டும் என்பது நாட்டின் பிரஜைகளின் எதிர்பார்ப்பாக காணப்படுகின்றது.






## இந்நாள்களை

# கண்ணியமாகக் கொண்டாடுவோம்



தருமலிங்கம் லுகிர்தா,
ஊடக கற்கைகள் துறை, யாழ். பல்கலைக்கழகம்.

ஒக்டோபர் 15 அன்று உலகில் இரண்டு முக்கியமான தினங்கள் கொண்டாடப்படுகின்றன: உலக கிராமத்து பெண்கள் தினம் (International Day of Rural Women) மற்றும் உலக கைதுவிக்கும் தினம் (Global Handwashing Day). இந்நாட்கள், கிராமப்புற பெண்களின் பங்களிப்பையும், கைத்துவிப்பின் முக்கியத்துவத்தையும் பிரதிபலிக்கின்றன.

**பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுப்போம். அவர்களை காப்போம்**

**கைத்துவிப்பு ஒரு எளிய மற்றும் விலைகுறைந்த வழிமுறையாகும்**

**கைத்துவிப்பினால் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துகிறது.**

## உலக கிராமத்து பெண்கள் தினம் (International Day of Rural Women)

உலக கிராமத்து பெண்கள் தினம், முதன்முதலில் 2008 ஆம் ஆண்டு உள்ளூர் கிராமப்புற பெண்களின் பங்களிப்பை கொண்டாடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு கொண்டாடப்பட்டது. இது, 2007 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட அனுப்புதல் உத்தியில் (Resolution) உருவாக்கப்பட்டது. இந்நாளின் மூலம், கிராமப்புறங்களில் வாழும் பெண்கள், அவர்களின் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் சேவைகளை உலகுக்கு முன்வைக்கலாம்.

கிராமப்புற பெண்கள், உலகின் உணவுப் பாதுகாப்பின் அடிப்படைத் தூண்களாக இருக்கிறார்கள். அவர்கள் விவசாயத்தில், வளங்களை பராமரிப்பதில் மற்றும் குடும்பங்களை நடத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். ஆனால், அவர்களின் பங்களிப்பு, மிகவும் குறைவாக மதிப்பீடு செய்யப்படுவதால், அவர்களுக்கு உரிமைகள் மற்றும் வாய்ப்புகள் குறைவாக இருக்கின்றன.

கிராமப்புற பெண்கள் பல சவால்களை சந்திக்கின்றனர். கல்வி, மருத்துவ வசதிகள் மற்றும் வேலையின்மை போன்றவற்றால், அவர்கள் பணியிடங்களில் மற்றும் சமூகங்களில் சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்த சவால்களை எதிர்கொள்வதற்கான முயற்சிகள், அவர்களின் சமூகத்தில் மாற்றத்தை உருவாக்குகிறது.

சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அரசு அமைப்புகள், கிராமப்புற பெண்கள் கற்பதற்கான கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குவதன் மூலம், அவர்களை உரிமையாக்க முயற்சிக்கின்றன. இவை, கிராமப்புற பெண்களுக்கு தொழில்முனைவோராக மாறும் வாய்ப்புகளை வழங்குகிறது.

## உலக கைதுவிக்கும் தினம் (Global Handwashing Day)

உலக கைதுவிக்கும் தினம், 2008 ஆம் ஆண்டு தொடக்கம், குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் இருவருக்கும் கைத்துவிப்பின் முக்கியத்துவத்தை அறிமுகப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டது. இந்த தினம், மக்களின் ஆரோக்கியத்திற்கான ஒரு முன்னணி நடவடிக்கையாகும்.

கைத்துவிப்பு, நோய்களின் பரவலைத் தடுக்கும் ஒரு எளிய மற்றும் விலை குறைந்த வழிமுறையாகும். உலகளாவிய அளவில், கைத்துவிப்பின் மூலம் வாழ்நாள் உயர்வுக்கான ஆரோக்கியத்தை பாதுகாக்கும் நோக்கில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துகிறது.

கைத்துவிப்பில் ஏற்பட்டுள்ள சவால்கள், உலகில் பல நாடுகளில் சுகாதாரத்தை பாதிக்கின்றன. அடிப்படை நீர் மற்றும் சுகாதார வசதிகள் இல்லாத இடங்களில், கைதுவிப்பின் அவசியம் மறுக்கப்படுகிறது. இதனால், நோய் தொற்றுகள் மற்றும் பிற சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

உலக கைதுவிக்கும் தினத்தை முன்னிட்டு, பள்ளிகளில், சமூகங்களில் மற்றும் அரசு அமைப்புகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இது, கைத்துவிப்பின் பயன்களை ஊக்குவிக்கும் விதமாக, அனைவருக்கும் நல்ல ஆரோக்கியத்தை வழங்குகிறது.


இன்று, உலக கிராமத்து பெண்கள் தினம் மற்றும் உலக கைதுவிக்கும் தினம் ஆகியன, ஒரே நேரத்தில் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் மற்றும் பெண்களின் உரிமைகளை முன்னேற்றும் நோக்கத்தில் உள்ளன. இந்த தினங்கள், சமூகத்தில் மாற்றங்களை உருவாக்குவதற்கான ஊக்கமாக இருக்கின்றன.

இந்த இரண்டு தினங்களும், மக்களின் நலனில் முக்கிய பங்குகளை வகிக்கின்றன. கிராமப்புற பெண்கள் மற்றும் கைத்துவிப்பின் முக்கியத்துவம், சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே, நாங்கள் அனைவரும் இந்த தினங்களை முன்னிட்டு, பெண்களின் உரிமைகளை காக்க, மற்றும் ஆரோக்கியத்திற்கான நல்ல பழக்கங்களை உருவாக்கவேண்டும்.

இது மட்டுமல்ல, அக்டோபர் 15 அன்று உலகில் மற்றவைகளும் உள்ளன, ஆனால் இந்த இரண்டு தினங்கள், குறிப்பாக வலிமையூட்டும் மற்றும் ஆரோக்கியத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கியமான தினங்கள்.

அக்டோபர் 15 இன்று உலகம் முழுவதும் மக்கள் இந்நாள்களை கண்ணியமாகக் கொண்டாடுவோம்.






### யாழ்.மாவட்டத்தில்

# 6 ஆசனங்களுக்காக 396 வேட்பாளர்கள் களத்தில்

இளங்கோவன் நிரோஷிகா,
யாழ். பல்கலைக்கழகம்,
ஊடகக்கற்கைகள் துறை

**6 ஆசனங்களுக்காக 396 வேட்பாளர்கள் என எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது**

**யாழில் 5,93187 பேர் வாக்களிக்க தகுதி செய்யப்பட்டுள்ளனர் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.**
**ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.**

**690 வேட்பு மனுக்கள் உறுதி தேர்தல் ஆணைக் குழு அறிவித்துள்ளது.**

இலங்கையில் அரசியலில் பல்வேறான நிகழ்வுகள் அண்மையில் அரங்கேறி வரும் சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற தேர்தலுக்காக வேட்பு மனுக்கள் தாக்கல் நிறைவடைந்துள்ள நிலையில், யாழ். மாவட்ட வேட்புமனு தாக்கல் எம்மை உற்றுப் பார்க்க வைக்கும் மீண்டும் ஒரு நிகழ்வு இடம் பெற்று இருக்கிறது. 6 ஆசனங்களுக்காக 396 வேட்பாளர்கள் என எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது ஆசனத்திற்கான போட்டி இலங்கையில் அண்மைக்காலத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பாராளுமன்ற தேர்தல் நடைபெறுவதற்கான திகதியாக நவம்பர் 14ஆம் திகதி குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் பாராளுமன்ற தேர்தலுக்காக வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்காக ஒக்டோபர் 4 முதல் ஒக்டோபர் 11 வரையிலான கால அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது.

இதக்கேட்ப 2024 பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு இதுவரை காலமும் கட்சிகளும் சுயேட்சைக் இரு குழுக்களும் வேட்புமனு தாக்கல் செய்திருந்த நிலையில் 2024.10.11 திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்த இருந்த வேட்புமனு தாக்கல் செய்யும் செயற்பாடானது அடுத்து ஒன்றரை மணி நேரம் ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் தெரிவிக்கும் விதத்தில் அதற்கான நேரம் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் 2024 ஆம் ஆண்டு பாராளுமன்ற 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் என மொத்தமாக 690 தரப்புகள் போட்டியிடப் போவதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்திருந்தார்.

பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக 764 வேட்பு மனுக்கள் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை கட்சிகளிடமிருந்து தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் 74 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை விடுத்து தற்போது 690 வேட்பு மனுக்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக் குழு அறிவித்துள்ளது. இவ்வாறு 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்து பாராளுமன்ற தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்டு இருக்கும் வேப்ப மனுக்களில் யாழ் தேர்தல் மாவட்டத்தில் இருந்து ஆறு ஆசனங்களுக்காக 396 வேட்பாளர்கள் போட்டியிடுவதை எம்மால் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு பாராளுமன்ற தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட செயற்பாட்டில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 46 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு இருந்தது அதில் 23 வேட்புமனுக்கள் அரசியல் கட்சிகளும் 23 வேட்புமனுக்கள் சுயேச்சை குழுக்களாலும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மொத்தமாக 46 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்த இந்நிலையில் ஆட்சேபனை அறிவிப்பின் போது இருந்து சுயேட்சை குழுக்களின் 2 வேட்பு மனுக்கள் சரியான காரணத்துடன் நிராகரிக்கப்பட்டு 21 சுயேட்சை குழுக்களின் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் தற்போது யாழ்ப்பாணத்தில் 44 வைப்பு மனுக்களை பாராளுமன்ற தேர்தலுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

எங்களையே பாராளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கை ஆறு ஆகும் தற்போது வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் யாழ் மாவட்ட தேர்தல் தொகுதியில் ஆறு ஆசனங்களுக்காக அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் கட்சிகளும் உள்ளடங்களாக 396 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர்.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் இம்முறை 5,93187 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப காலங்களில் பாடசாலைகளில் சங்கீத நாற்காலி விளையாடுவது போல் இன்று அரசியலுக்கான நாற்காலிக்காக விளையாட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அந்த வகையிலேயே 396 பேரும் ஆறு ஆசனங்களை பிடிக்கும் முயற்சியில் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் வழமையை விட தேர்தலில் நிற்கும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதனை பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

இலங்கை வரலாற்றில் என்றும் இல்லாதவாறு ஜனாதிபதி தேர்தலில் இம்முறை 39வாக்காளர்கள் வைப்பு மனுக்களை தாக்கல் செய்தது வரலாற்றில் இதுவே முதல் தடவையாக பார்க்கப்பட்டது. இவ்வாறு ஒரு ஆசனத்திற்கு 38 பேர் போட்டியிட்டது போன்று தற்போது ஆறு ஆசனத்திற்கு 396 பேர் போட்டியிடுவது மக்களை ஒரு குழப்ப நிலைக்கு உள்ளாக்கியுள்ளது என்றே கூறலாம். தமிழ் தேசியம் பேசக்கூடிய கட்சிகள் பல்வேறு கட்சிகளாக பிரிந்து போட்டியிடுகின்றன.

குறிப்பாக இலங்கை தமிழரசு கட்சியிலிருந்து பல அணிகள் பிரிந்துள்ள நிலையில் ஏனைய கட்சிகளில் இருந்து அணிகள் பிரிந்து புதிதாக பல சுயேட்சை குழுக்கள் போட்டியிடுவதை காணக் கூடியதாக உள்ளது.

ஆறு ஆசனங்களுக்காக 396 பேர் வேட்பாளராக களமிறங்கும் சந்தர்ப்பத்தில் அது மக்களின் மத்தியில் ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்தக் கூடியதாக அமைகிறது. 38 பேரில் இருந்து ஒருவரை தேர்ந்தெடுத்த மக்களுக்கு மீண்டும் 396 பேரில் இருந்து ஆறு பேரை தெரிவு செய்வது என்பது மக்களுக்கு ஒரு சவாலாகவே காணப்படுகிறது. தேர்வு செய்யும் உரிமை மக்களிடம் உள்ளது.

பொருத்திருந்து பார்க்கலாம் என்ன நடக்கப்போகிறது என்று.

# ஒருங்கிணைந்த சூழலியல் சமாதானம்



சந்திரகுமார் யதுஷினி
ஊடகக்கற்கைகள் துறை யாழ். பல்கலைக்கழகம்



இன்றைய காலகட்டத்தில் நம்மைச் சுற்றி இருக்கின்ற சூழல் சார்ந்த பாதுகாப்பும், சமூகங்களிடையே நல்லிணக்கத்தை பேணல் என்பதும் இன்றியமையாத அம்சமாக காணப்படுகின்றது.

இந்த சூழ்நிலையில், சூழலியல் சமாதானம் என்பது மக்களுக்கும், சுற்றுச்சூழலுக்கும் இடையே நேயமான தொடர்பு மற்றும் சமநிலையை பேணி மக்களிடையே நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கு, சூழலை பாதுகாப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குரிய முயற்சிகளை குறித்து நிற்கின்றது.

குறிப்பாக, சமாதானம் என்பது சமூகங்களிடையே போராட்டம் இல்லாமை என்பது மட்டுமல்லாமல், மனித நலனைப் பாதிக்கும் பல்வேறு அம்சங்களை கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்றாக சூழல் அமைய பெற்றிருக்கின்றது. சமாதானத்திற்குரிய கூட்டிணைவு, வேற்றுமையில் ஒற்றுமை, கலாசார விழுமியங்களை ஏற்றுக் கொள்ளும் தன்மை, புரிந்துணர்வு போன்ற விசேட அம்சங்கள், சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்ற விழிப்புணர்வுத் திட்டங்கள், செயல்பாடுகள் என்பவற்றினூடாக முன்னெடுத்துச் செல்ல முடியும். இது நிலையான சமாதானத்திற்கும், சூழல் பாதுகாப்பிற்கும் அடிப்படையாக அமையும்.

இந்த வகையில், அம்பாறை மாவட்டத்தில் குறிப்பாக, கல்முனை, நாவிதன்வெளி, உகன பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள இளைஞர்களால், சூழலியல் சமாதானத்திற்கான முயற்சிகள் CAFOD நிறுவனத்தின் நிதி அனுசரணையில், சமாதானமும் சமூகப்பணியும் (Peace and Community Action - PCA) அமைப்பினுடைய ஒருங்கிணைந்த சூழலியல் சமாதானம் (PIPE-Promoting Integration Of Peace And Ecology) எனும் செயற்றிட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சமாதானமும் சமூகப்பணியும் நிறுவனமானது, வன்முறையற்ற அணுகுமுறைகளினூடாக சமூகங்களில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நிலை நிறுத்திக்கொள்ள பல பங்குதாரர்களுடன் பணியாற்றும் அரச சார்பற்ற அமைப்பாகும். 1998 களில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் Quaker Peace and service என அழைக்கப்பட்டது. பல்லின மக்கள் வாழும் அம்பாறை மாவட்டத்தில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை நிலைநிறுத்துவதற்கான நோக்கில், கடந்த காலங்களில் குறிப்பாக (Youth Creating Humanity Action through Non Violent, Gathering and Empowerment, Advocacy for Community Transitional Initiation Voice and Empowerment, Youth for Peace) எனப் பல செயற்றிட்டங்களை முன்னெடுத்திருந்தது. இதனூடாக, தனிநபர்கள் குழுக்கள் மற்றும் சமூகங்களுக்கு மத்தியில் நம்பிக்கை, திறன் என்பவற்றை வளர்ப்பதற்கான சந்தர்ப்பங்களையும் உருவாக்கியிருந்தது.

ஒருங்கிணைந்த சூழலியல் சமாதானம் ( PIPE ) தொடர்பில், இத்திட்டம் "மக்களிடையே சமாதானம், நல்லிணக்கம், கலாச்சாரம் என்பவற்றை வளர்ப்பதன் மூலம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மேம்படுத்துவதனை, நோக்காகக் கொண்டுள்ளது. நமது பூமியின் எதிர்கால பாதுகாவலர்கள் இளைஞர்கள் என்பதை புரிந்து கொண்டு, அமைதியான சக வாழ்வுக்காகவும் அதேவேளையில், சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ளத் தேவையான அறிவு மற்றும் திறன்களை அவர்களுக்கு வழங்குவதற்காகவும் இந்தத் திட்டத்தில் இளைஞர்களை உள்வாங்கியிருக்கின்றோம்", இது ஏககாலத்தில் கிட்டத்தட்ட 6 நாடுகளில் இளைஞர்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது" என்று ஒருங்கிணைந்த சூழலியல் சமாதானம் திட்டத்திற்கு பொறுப்பாக இருக்கின்ற திட்ட உதவியாளர் M.M.M அஹ்னப் குறிப்பிடுகின்றார்.

சூழலியல் சமாதானத்திற்காக சமாதானமும் சமூகப்பணியும் நிறுவனத்தினால், இளைஞர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சி பட்டறைகள், கலந்துரையாடல்கள், களப் பயணங்கள் என்பவற்றின் மூலம் சூழலியலும், சமூக நல்லிணக்கமும் ஒன்றோடொன்று இணைந்திருப்பது பற்றிய தெளிவூட்டல்கள் வழங்கப்படுகின்றன.

இதன்மூலம், அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் பங்காளர்களாக இருக்கின்ற இளைஞர்களுக்கு, சுற்றுச்சூழலை பாதுகாப்பதிலும் சமாதானத்தை மேம்படுத்துவதிலும் தங்கள் பங்கைப் பற்றி விமர்சன ரீதியாக சிந்திப்பதற்கான களம் உருவாக்கப்படுகின்றது. குறிப்பாக, பல்லின மக்கள் சேரும் இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல், சூழலுக்கு நேயமான பொருட்களை பயன்படுத்துவதற்காக பாடசாலை மட்டங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை செய்தல், பிளாஸ்டிக் முகாமைத்துவம் தொடர்பான வேலை திட்டங்களை மேற்கொள்ளல், மர நடுகை, சூழல் சுத்தமாக்கல் செயற்பாடுகள், இவை தவிர சமாதான நடைபவனி, விழிப்புணர்வு வீதி நாடகம், கண் காட்சி, போன்றவற்றின் மூலம் சூழலியல் சமாதானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து, இளைஞர்களுடைய ஆலோசனைகள், முன்முயற்சிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு சமூகத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட இருக்கின்ற செயற்பாடுகள் பற்றி, திட்டத்தில் பங்கேற்பாளராக இருக்கின்ற யுவதி ஒருவர், "செய்தவற்றை கொண்டாடுவதை விட்டு அனுபவங்களை மீளாய்வு செய்வது, எங்களுடைய அடுத்த கட்டங்களை செம்மையாகக் கொண்டு செல்ல உதவும். இந்த வகையில், சூழலியல் சமாதானத்திற்காக இளைஞர்கள் மேற்கொண்ட செயற்பாடுகள் உடைய, அனுபவத்தை நான் குறிப்பிடுவதானது, நான் என்பதையும் தாண்டி நாம் என்ற எங்கள் இளைஞர்களுடைய அனுபவப் பகிர்வாக அமையும் என்று நம்புகிறேன்".

அதன்படி, ஜூன் 05 ஆம் திகதி சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, கழிவுப் பொருட்களை உரிய முறையில் அகற்றுவது தொடர்பாக 2024 ஜீன் 04 ஆம் திகதி கல்முனை கிரீன் பீல்ட் பகுதியில் சூழல் சுத்தமாக்கல் செயல்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன்போது, கல்முனை மாநகர சபை மற்றும் அரச அதிகாரிகளும் இணைந்திருந்தனர்". ஒருங்கிணைந்த சூழலியல் சமாதானம் திட்டத்தில், இளைஞர்கள் தாம் பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் வெளிப்படுத்தியிருந்தனர்.



# அமைச்சரவை முடிவுகள் சில...




## ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில், ஒக்டோபர் 14 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகளில் சில.

### 77 ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டம்

2025.02.04 ஆம் திகதி இடம்பெறவுள்ள 77 ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டத்தை நடாத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி தலைமையில், பிரதமர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரின் பங்கேற்புடன் அமைச்சரவைக் குழுவொன்றை நியமிப்பதற்கும், சுதந்திரதின வைபவத்தைப் பெருமையுடன் ஒழுங்குபடுத்துவதற்கு இயலுமாகும் வகையில் ஏற்புடைய அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களின் பிரதானிகளின் பங்கேற்புடன் வழிநடாத்தல் குழுவொன்றை நியமிப்பதற்காக நீதி, பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### காணித்துண்டை ஒப்படைத்தல்

ஏக்கல மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களில் காணப்படும் அதிக மின்சாரக் கேள்விக்கமைய, தொடர்ச்சியான மின்வழங்கலைப் போன்று, தற்போது நிலவுகின்ற மின்கட்டமைப்பின் தரப்பண்பான நிலைமையை அதிகரிக்கும் நோக்கில், ஏக்கல கைத்தொழில் பேட்டையில் உப மின் நிலையத்தை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏக்கல சென்ட்குறோப் தோட்டத்திற்கு அண்டியதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 10 ஏக்கர் காணியில், 02 ஏக்கர் 02 றூட் காணித்துண்டைப் பயன்படுத்தி குறித்த உப மின் நிலையத்தை அமைப்பது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, அரச பிரதம மதிப்பீட்டாளரின் விலைமதிப்பீட்டுப் பெறுமதியான 320 மில்லியன் ரூபாவை அறவிட்டு, குறித்த காணித்துண்டை இலங்கை மின்சார சபைக்கு ஒப்படைப்பதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### சர்வதேச பேரவையால் வழங்கப்படும் நன்கொடை

ஆவணக்காப்புத் தொடர்பான மேனிலைத்தரவு (Metadata) மற்றும் டிஜிட்டல் பாதுகாப்புக்கான Atom (Access to memory) மற்றும் Archivematica போன்ற திறந்த மூலாதார மென்பொருள் தொடர்பான நிபுணர்களை இணைத்துக் கொண்டு 'இலங்கை தேசிய சுவடிகள் கூடத்தில் Atom (Access to memory) மற்றும் Archivematica போன்ற மென்பொருள் தளத்தை உருவாக்குவதற்காக' 7,000 யூரோக்கள் நன்கொடையை வழங்குவதற்கு ஆவணக் காப்பகங்களின் சர்வதேச பேரவையின் சர்வதேச ஆவணக்காப்பு அபிவிருத்திக்கான நிதியம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

தேசிய சுவடிகள்கூடத்தின் நம்பகமான டிஜிட்டல் களஞ்சியத்தை அமைப்பதற்காக தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டத்தின் கட்டம் - 01 இற்கான செலவின் ஒருபகுதியைப் பொறுப்பேற்பதற்காக குறித்த நன்கொடையைப் பயன்படுத்துவதற்காக ஆவணக்காப்பகங்களின் சர்வதேசப் பேரவை உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, குறித்த நன்கொடையைப் பெற்றுக் கொள்வதற்கான கருத்திட்ட சமவாயத்தை ஆவணக்காப்பகங்களின் சர்வதேச பேரவையுடன் கையொப்பமிடுவதற்கும் மற்றும் அதற்குரிய ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### மருத்துவ வழங்கல்களுக்கான பெறுகை

இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கி உள்நாட்டு மருந்து உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக பின்னரான கொள்வனவு செய்தல் ஒப்பந்தப் (Buy Back Agreement) பொறிமுறையின் கீழ் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக 2013.11.29 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ள உள்நாட்டு மருந்து உற்பத்திக் கம்பனிகளின் உற்பத்திகளுக்கு 15 ஆண்டுகளுக்கான பின்னரான ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கும், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் முன்னுரிமையின் அடிப்படையில் குறித்த மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கும், சுகாதார அமைச்சுடன் உள்நாட்டு மருந்து உற்பத்தியாளர்களுக்கிடையில் மருந்துகள் விநியோகிப்பதற்கான பின்னரான ஒப்பந்தத்தை 10 ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்தவும், 2018.10.02 அன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, விநியோகிக்கப்படும் மருந்துகளின் விலையைத் தீர்மானிப்பதற்காக விலை நிர்ணயக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த மருந்துகளைக் கொள்வனவு செய்கின்ற முறைக்கமைய தற்போதுள்ள மருத்துவ விநியோகத் தேவையின் 20 சதவீதம் உள்ளடக்கப்படுவதுடன், குறித்த அளவை 40 சதவீதம் வரை அதிகரிப்பதற்கான இயலுமை காணப்படுவதாக அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, மருந்துகள் உள்ளிட்ட மருத்துவ விநியோகங்கள் 454 இனை விநியோகிப்பதற்கான இயலுமை காணப்படுகின்ற 49 உள்நாட்டு மருந்துகள் உற்பத்தி நிறுவனங்கள் சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவால் அடையாளங் காணப்பட்டுள்ளன. இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மருந்துகள் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் மருந்துகள் உற்பத்திச் செயன்முறைக்கும் தற்போது பின்னரான ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ள உள்நாட்டு உற்பத்தி நிறுவனங்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில், அடையாளங் காணப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒரு வருடத்திற்காக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகள் உள்ளிட்ட மருத்துவ விநியோகத்தை மேற்கொள்வதற்காக பின்னரான கொள்வனவு செய்தல் ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### பாதுகாப்பு சேவை வழங்கலுக்கான பெறுகை

சுகாதார அமைச்சின் கீழ் காணப்படுகின்ற மருத்துவமனைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பாதுகாப்பு சேவைகள் வழங்குவதற்காக மட்டுப்படுத்தப்பட்ட போட்டி விலைமுறி கோரல் முறைமையைப் பின்பற்றி, வரையறுக்கப்பட்ட றக்னா லங்கா பாதுகாப்புக் கம்பனி, வரையறுக்கப்பட்ட எல்.ஆர்.டீ.சீ.தனியார் கம்பனி மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கும், மத்திய மாகாண சபையின் கீழ் இயங்குகின்ற பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் மற்றும் வடமேல் மாகாண சபையின் கீழ் இயங்குகின்ற மனிதவன அபிவிருத்தி அதிகாரசபைக்கு குறித்த மாகாணங்களில் அமைந்துள்ள சுகாதார அமைச்சின் கீழ் காணப்படும் மருத்துவமனைகள்/ நிறுவனங்களுக்கான விலைமுறி கோரப்பட்டுள்ளது. அதற்கமைய, வரையறுக்கப்பட்ட எல்.ஆர்.டீ.சீ.சேவைகள் (தனியார்) கம்பனியால் அனைத்து மருத்துவமனைகளுக்கும், மத்திய மாகாண சபையின் கீழ் இயங்குகின்ற பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் குறித்த மாகாணத்தில் அமைந்துள்ள சுகாதார அமைச்சின் கீழ் காணப்படும் மருத்துவமனைகளுக்கான விலைமுறி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரை மற்றும் பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவைக் கருத்தில் கொண்டு, குறித்த பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் 2024.10.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் 06 மாத காலத்திற்கு வரையறுக்கப்பட்ட எல்.ஆர்.டீ.சீ.சேவைகள் (தனியார்) கம்பனிக்கு வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### மீன்பிடித்துறைக்கான நிகழ்ச்சித்திட்டம்.

எரிபொருள் விலை மிகவும் பெருமளவில் அதிகரித்தமை காரணமாக மீன்பிடித்துறையில் ஏற்படும் பாதகமான தாக்கத்துக்கு தீர்வு வழங்குவதற்கு 2024.08.21 திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், குறித்த தீர்மானம் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை. எனவே,மீனவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதனை குறிக்கோளாக கொண்டு 2024.10.01 திகதியிலிருந்து அமுலாகும் வகையில் 06 மாத காலத்துக்கு பின்வரும் நிவாரணங்களை வழங்குவதற்காக விவசாய, காணி, கால்நடை வள, நீர்ப்பாசன, மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

- எரிபொருளாக டீசல் பெற்றுக்கொள்ளும் மீன்பிடிக் கலங்களின் உரிமையாளர்கள் பெற்றுக்கொள்ளும் ஒரு லீற்றர் டீசலுக்கு ரூபாய் 25 ரூபாய் கிடைக்கும் வகையில் ஒரு மாதத்துக்கு ரூபாய் 300,000 வரையான உச்ச எல்லைக்குள் 'மீன்பிடித்துறையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான கொடுப்பனவு' வழங்குதல்.
- எரிபொருளாக மண்ணெண்ணை பெற்றுக்கொள்ளும் மீன்பிடிக் கலங்களின் உரிமையாளர்கள் பெற்றுக்கொள்ளும் 15 லீற்றர் மண்ணெண்ணைக்கு 25 ரூபாய் பணம் கிடைக்கும் வகையில் ஒரு மாதத்தில் ஆகக்கூடியது 25 நாட்கள் என்ற அடிப்படையில், தொழிலில் ஈடுபடும் நாட்களுக்கு மட்டும் வரையறுக்கப்படும் வகையில் ஒரு லீற்றர் மண்ணெண்ணைக்கு 25 ரூபாய் 'மீன்பிடித்துறையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான கொடுப்பனவு' வழங்குதல்.
- டீசல் மற்றும் மண்ணெண்ணை விலைத் திருத்தம் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் டீசலுக்கான உச்ச நிவாரண விலை 250 ரூபாய் மட்டத்திலும், மண்ணெண்ணைக்கான உச்ச விலை 150 ரூபாய் மட்டத்திலும் ஆகக்கூடியது 06 மாத காலம் வரை டீசலுக்காக ஆக்ககூடியது சந்தை விலையிலிருந்து 7.5 சதவீத நிவாரணமும், மண்ணெண்ணைக்கு ஆக்ககூடியது சந்தை விலையிலிருந்து 12.5 சதவீத நிவாரணமும் மீனவர்களுக்கு கிடைக்கும் வகையில் மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல்.

### உணவுக் கொள்கைக் குழு

உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை தட்டுப்பாடின்றி சந்தைக்கு கிடைப்பதை உறுதி செய்வதற்கும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை இயன்றளவு கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கும், அனைத்து தரப்பினருடனும் ஒருங்கிணைப்பு அணுகுமுறையை பின்பற்றி பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய வகையில் 2022.10.03 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் நிறுவப்பட்ட உணவுக் கொள்கை குழுவை பின்வரும் அலுவலர்களை உள்ளடக்கி மீள நிறுவுவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இன்று ஆரம்பிக்கிறது முதலாவது டெஸ்ட்:

# இந்தியாவை வீழ்த்துமா நியூசிலாந்து?

இந்திய, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியானது பெங்களூருவில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கிறது.

மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கையில் 0-2 என தொடரை இழந்தவாறு வரும் நியூசிலாந்து பாரியளவு முன்னேற்றத்தைக் காண்பித்தாலே இந்தியாவுக்கு சவாலையளிக்க முடியும்.

அதுவும் கேன் வில்லியம்சன் இப்போட்டியை தவறவிடுகின்றமையானது நியூசிலாந்துக்கு பின்னடைவாக காணப்படுகின்றது. வில்லியம்சனை அணியில் வில் யங் பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. தவிர மிற்செல் சான்ட்னெரை



மிஷெல் பிறேஸ்வெல் பிரதியிடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. இதுதவிர டிம் சௌதிக்குப் பதிலாக மற்ஹென்றி களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆடுகளமானது கறுப்பு மண்ணாலான மெதுவான சுழற்சியை வழங்கக்கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுவதோடு, அண்மைய நாள்களில் மழை காரணமாக வேகப்பந்துவீச்சுக்கு ஆரம்பத்தில் ஒத்துழைக்குமென நம்பப்படுகின்றது.

அந்தவகையில் ஜஸ்பிரிட் பும்ரா, மொஹமட் சிராஜ், ஆகாஷ் டீப் என மூன்று வேகப்பந்துவீச்சாளர்களுடனேயே இந்தியா களமிறங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும் சுழற்பந்துவீச்சுக்கு நியூசிலாந்து தடுமாறுமென்ற நிலையில் டீப்பை குல்தீப் யாதவ் பிரதியிடக்கூடிய வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே:

# அக்கரைப்பற்று நவக்சன் சிறந்த வீரர்

வி. சுகிர்தகுமார்




அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான கராத்தேயில் சிறந்த வீரராக அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் தேசிய பாடசாலை மாணவனும் ராம் கராத்தே சங்கத்தின் வீரருமான எஸ்.நவக்சன் தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வாறு கிழக்கு மாகாணத்தை சேர்ந்த வீரர் ஒருவர் தேசிய ரீதியில் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதற்தடவையாகும். கிளிநொச்சி உள்ளக விளையாட்டு அரங்கில் வெள்ளிக்கிழமை (11) முதல் திங்கட்கிழமை (14) வரை நடைபெற்ற போட்டிகளிலேயே நவக்சன் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டதுடன் திருக்கோவில் கல்வி வலயத்துக்குட்பட்ட இராமகிருஷ்ண மிஷன் தேசிய பாடசாலை நான்கு மாணவர்களும் பதங்கங்களை பெற்றுக்கொண்டனர்.

இதில் குமித்தே போட்டிகளில் 20 வயதுக்குட்பட்ட போட்டியில் நவக்சன் வெள்ளிப் பதக்கத்தையும், 16 வயதுப் பிரிவில் கே. சஜந்தன் வெண்கல பதக்கத்தையும் காத்தா போட்டிகளில் 20 வயது பிரிவில் நவக்சன் வெண்கலப் பதக்கத்தையும், 16 வயதுப்




பிரிவில் எஸ். கிவோன்ஷ்டன் வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இதனடிப்படையில் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்து பதங்கங்களை வென்ற ஒரே வலயம் திருக்கோவில் கல்வி வலயம் என்பதுடன் இராமகிருஷ்ண மிஷன் தேசிய பாடசாலை தேசிய ரீதியில் மூன்றாம் நிலையினை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளுக்காக மாணவர்களை பயிற்றுவித்து தயார்படுத்திய ராம் கராத்தே சங்கத்தினருக்கும் ஸ்தாபகரும் சங்கத்தின் பிரதம போதானாசிரியருமான சிகான் கே. கேந்திரமூர்த்தி, பயிற்றுவிப்பாளர் கே. ராஜேந்திரபிரசாத் (ராமிலன்), கே.சாரங்கன் ஆகியோர்களுக்கும் பாடசாலை நிர்வாகம் மற்றும் கல்விச்சமூகம் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# முன்னிலையில் பாகிஸ்தான்

இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் பாகிஸ்தான் முன்னிலையில் காணப்படுகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இங்கிலாந்து வென்ற நிலையில், முல்தானில் செவ்வாய்க்கிழமை (15) ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தானின் அணித்தலைவர் ஷண் மசூட் தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பாகிஸ்தான் ஆரம்பத்திலேயே அப்துல்லா ஷஃபிக்கையும், மசூட்டையும் ஜேக் லீச்சிடம் இழந்தது.



பின்னர் சைம் அயூப்பும், அறிமுக வீரர் கம்ரான் குலாமும் இனிங்ஸைக் கட்டியெழுப்பிய நிலையில் 77 ஓட்டங்களுடன் மத்தியூ பொட்ஸிடம் அயூப் வீழ்ந்தார். அடுத்து வந்த சௌட் ஷகீலும் உடனேயே பிறைடன் கார்ஸிடம் வீழ்ந்தார்.

இறுதி நேரத்தில் 118 ஓட்டங்களுடன் குலாமும் ஷொய்ப் பஷிரிடம் வீழ்ந்த நிலையில் செவ்வாய்க்கிழமை (15) முதல் நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 259 ஓட்டங்களை பாகிஸ்தான் பெற்றுள்ளது. தற்போது களத்தில் மொஹமட் றிஸ்வான் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களுடனும், சல்மான் அக்ஹா ஐந்து ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர்.

தேசங்களுக்கான லீக்:

# பெல்ஜியத்தை வென்ற பிரான்ஸ்

## காலிறுதியில் ஜேர்மனி

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் தேசங்களுக்கான லீக் தொடரில், பெல்ஜியத்தில் செவ்வாய்க்கிழமை (15) நடைபெற்ற அவ்வணியுடனான குழு பி போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் வென்றது.

பிரான்ஸ் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் ரன்டல் கொலோ முவானி பெற்றதோடு, பெல்ஜியம் சார்பாகப் பெறப்பட்ட கோலை லொய்ஸ் ஒபென்டா பெற்றிருந்தார்.

இதேவேளை காலிறுதிப் போட்டிகளுக்கு ஜேர்மனி தகுதி பெற்றது. தம்நாட்டில் நடைபெற்ற நெதர்லாந்துடனான குழு சி போட்டியில்



வென்றமையையடுத்தே காலிறுதிப் போட்டிக்கு ஜேர்மனி தகுதி பெற்றது. ஜேர்மனி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜேமி லெவெலிங் பெற்றிருந்தார்.

இந்தியா கனடா உறவுக்கிடையில்

# விரிசல்



காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜாரில் கொலை சம்பவத்தை அடுத்து, இந்தியா - கனடாவுக்கிடையிலான உறவில் மீண்டும் விரிசில் ஏற்பட்டுள்ளது.

இந்நிலமையால், கனடாவில் உள்ள இந்திய தூதர்களை திரும்பப்பெறுவதாக இந்தியா அதிரடி அறிவிப்பு ஒன்றை திங்கட்கிழமை (14) வெளியிட்டது. மேலும் இந்தியாவில் உள்ள கனடா நாட்டு தூதுவர்கள் 6 பேரையும் வரும் 19ஆம் திகதிக்குள் நாட்டை விட்டு வெளியேறவும் இந்தியா உத்தரவிட்டுள்ளது.

காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார், கடந்த ஜூன் 18 ஆம் திகதி, கனடாவில் வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இந்த கொலையில் இந்திய அரசாங்கத்துக்க தொடர்பு உள்ளதாக, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இதனைத்தொடர்ந்து கனடா- இந்தியா உறவில் விரிசல் ஏற்பட்டது. பின்னர் இந்த விவகாரம் சற்று தணிந்த நிலையில் தற்போது மீண்டும் வெடிக்கத்தொடங்கியுள்ளது. அதாவது, நிஜ்ஜார் கொலையில் கனடாவுக்கான இந்தியத் தூதருக்கு தொடர்பு உள்ளதாக கனடா குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த அக்டோபர் 11ஆம் திகதி லாவோஸ் நாட்டில் நடந்த ஆசிய மாநாட்டில் பிரதமர் மோடியும் ஜஸ்டின் ட்ரூடோவும் நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்தது. இந்த சந்திப்பில் கனடா மக்களின் பாதுகாப்பு குறித்து மோடியிடம் பேசியதாக ட்ரூடோ தெரிவித்தார்.

ஆனால் அவர் அப்படி எதுவும் மோடியிடம் பேசவில்லை என்று இந்தியா மறுப்பு தெரிவித்தது. இதனைத்தொடர்ந்து கனடாவில் இந்திய அரசாங்கத்தின் வன்முறை பிரசாரத்தின் ஒரு பகுதியாக இந்திய தூதர்கள் பணியாற்றினர் என்பதற்கான சான்றுகளை கனடா பொலிஸார் சேகரித்துள்ளதாக, கனடா சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இது, நிலைமையை இன்னும் மோசமடைய வைத்துள்ளது. அதாவது, கனடாவில் உள்ள இந்திய தூதர்களை திரும்பப்பெறுவதாக இந்தியா அதிரடி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. மேலும் இந்தியாவில் உள்ள கனடா நாட்டு தூதர்கள் 6 பேரையும் வரும் 19ஆம் திகதிக்குள் நாட்டை விட்டு வெளியேறவும் இந்தியா உத்தரவிட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை குறித்து ஜஸ்டின் ட்ரூடோ விமர்சித்துள்ளார். இது தொடர்பாக ட்ரூடோ ஒட்டோவாவில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், “இந்தியாவின் செயல்கள் ஏற்றுக்கொள்ள முடியாததாக உள்ளது. கனேடிய மண்ணில் கனேடியர்களுக்கு எதிரான கொலை, வன்முறை சம்பவங்கள் என பல்வேறு குற்றச்செயலைகளை ஆதரித்து இந்திய அரசு மிகப்பெரிய தவறை செய்துவிட்டது.

“இந்த குற்றங்களுக்கு இந்திய அரசு உடந்தையாக இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. இதுதொடர்பான ஆதாரங்களை இந்திய வெளியுறவு அதிகாரிகளை எங்கள் நாட்டின் தூதுவர்கள் 6 பேரும் நேரில் சந்தித்து வழங்கினர். ஆனாலும் இந்திய அரசு இந்த விவகாரத்தில் ஒத்துழைக்க மறுக்கிறது” என குற்றம் சாட்டியுள்ளார்.

உத்தரப் பிரதேசம்

கை, கால் கட்டப்பட்ட நிலையில்

# வீதியில் இருந்து சிறுமி மீட்பு

உத்தரப் பிரதேச மாநிலம், லக்னோவில் உள்ள சின்ஹாட் வீதியில், திங்கட்கிழமை (14) அதிகாலை, கை கால்கள் கட்டப்பட்ட நிலையில் 14 வயது சிறுமி ஒருவர் மீட்கப்பட்டுள்ளார்.

லாலுளாய் கிராமத்தை சேர்ந்த குறித்த சிறுமி, திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு தனது வீட்டில் இருந்து காலைகடன் கழிப்பதற்காக வெளியே சென்றுள்ளார்.

வெகு நேரம் ஆகியும் அவர் வீட்டுக்கு திரும்பாத நிலையில், பெற்றோர் அவரை தேடி வந்துள்ளனர். இதன்போதே, குறித்த சிறுமி கை கால்கள் கட்டப்பட்ட நிலையில் வீதியில் இருந்து மீட்கப்பட்டார்.

மீட்கப்பட்ட சிறுமி லோஹியோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். வீட்டை விட்டு அதிகாலை வெளியே வந்த குறித்த சிறுமி தனியாக இருப்பதைப் பார்த்த அதே கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் 3 பேர் சிறுமியைக் கூட்டுப் பாலியல் வல்லுறவு செய்துள்ளனர் என்றும் சிறுமி இறந்துவிட்டதாக நினைத்து அவரின் கை கால்களைக் கட்டி வீதியில் வீசிச் சென்றுள்ளனர் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பிரான்ஸ்

# பிரான்ஸ் ஆய்வாளருக்கு சிறை

வெளிநாட்டு முகவராக தன்னை பதிவு செய்வதற்கு, ரஷ்யாவின் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட பிரான்ஸ் ஆய்வாளருக்கு, மொஸ்கோவில் உள்ள நீதிமன்றம், 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.



சுவிட்ஸ்சர்லாந்தை தளமாக கொண்ட மோதல் மத்தியஸ்த தன்னார்வ தொண்டு நிறுவனத்தில் பணியாற்றிய லாரன்ட் வினேடியர் (வயது 48) என்பவருக்கே, இவ்வாறு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய இராணுவம் பற்றிய தகவல்களை சேகரித்த குற்றத்துக்காக, கடந்த ஜூன் மாதம் அவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழகம்

வங்க கடலில் காற்றழுத்தம்

# தமிழகத்துக்கு சிவப்பு எச்சரிக்கை

வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுப்பெற்று வடதமிழக கடலோர பகுதியை நோக்கி அடுத்த 48 மணிநேரத்தில் நகரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.



இதனால் புதன்கிழமை (16), அடைமழை பெய்யக் கூடும் என்று, சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அடைமழை பெய்து வருகின்றது, இதை அடுத்து, சென்னை உள்பட நான்கு மாவட்டங்களை சேர்ந்த பள்ளி, கல்லூரிகளுக்கு செவ்வாய்க்கிழமை (15) விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி திங்கட்கிழமை (14), அதிகாலை 5.30 மணிக்கு உருவானது. இது இரண்டு நாள்களில் மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து வடதமிழகம், தெற்கு ஆந்திர கடலோர பகுதி மற்றும் புதுச்சேரி நோக்கி நகரும்.

தமிழக பகுதிகளின் மேல், ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சியும் நிலவுகிறது. இதுதவிர தெற்கு ஆந்திர கடலோர பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக (புதன்கிழமை) (வியாழக்கிழமை) வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

காசா

# அகதி முகாமுக்குள் வெடிகுண்டு



வடக்கு காசா முற்றுகைக்கு மத்தியில், ஜபாலியாவில் இஸ்ரேலிய இராணுவம் வெடிமருந்துகளை வைத்துள்ளது.

அல்-பலூஜா பகுதியில் உள்ள ஜபாலியா அகதிகள் முகாமின் வீடுகளிலேயே, இஸ்ரேலிய இராணுவம் வெடிமருந்துகளை வைத்துள்ளதாக, வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

இதனால், வடக்கு காசா மீதான இஸ்ரேலின் முற்றுகை தொடர்கிறது. இதில், சுமார் 400,000 பாலஸ்தீனியர்கள் சிக்கியுள்ளனர்.

தென்கொரியா

தென்கொரியாவின்

# வீதிகளை தகர்த்தது வடகொரியா

தென் கொரியாவை இணைக்கும் வீதிகளின் வடக்குப் பகுதிகளை, வட கொரியா தகர்த்துள்ளதாக, தென் கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளை பிரிக்கும் இராணுவ எல்லைக் கோட்டுக்கு வடக்கே உள்ள வீதியின் சில பகுதிகளே, செவ்வாய்க்கிழமை (15) அதிகாலை தகர்க்கப்பட்டதாக, கூட்டுப் படைத் தலைவர்கள் தெரிவித்தனர்.

எல்லைக் கோட்டுக்கு தெற்கே இராணுவம் எச்சரிக்கை துப்பாக்கிச்




சூடு நடத்தியதாகவும் கொரியாவின் தலைநகரம் பியோங்யாங் பகுதியில் உள்ள வீதிகளை தகர்க்க தயாராகி வருவதாக, திங்களன்று (14) சியோல் அமைப்பு எச்சரித்திருந்தது எனவும், கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 16, ஒக்டோபர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.